Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை (12.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 012

# அமைச்சர் டக்ளஸுடன் இணைந்து கட்சிபேதமின்றி செயற்படத் தயார்

## வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எங்களது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நானும் எமது மக்களின் அபிவிருத்தியில் கட்சி பேதமின்றி செயற்படத்தயாராக இருக்கிறோம் என வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் பி.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று கிறீன்கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் புதிய நிர்வாகத்தை தேர்வு செய்வதற்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது பகுதிகளில் எம்மக்களின் அபிவிருத்தி தொடர்பில் தேர்தல் காலங்களில் போலல்லாது ஒன்றுமையாக கட்சி போதமின்றி செயற்படவேண்டும் அந்தவகைளில் எமது தனியார் போக்குவரத்து துறை தொடர்பாக நியதிச் சட்டம் உருவாக்கி ஆளுநரிடம் இது தொடர்பில் கதைத்துள்ளேன் விரைவில் அதற்கான அங்கீகாரம் கிடைத்தால் எங்களது உரிமைகளும் பாதுகாக்கப்படுவதுடன் நல்ல தொரு சேவையினையும் மக்களுக்கு வழங்க முடியும் என நம்புகின்றேன்.

விரைவில் அனைத்து மாவட்டத்திலும் இருந்து போக்குவரத்துச் சங்கங்களின் ஒன்றியத்தினை

19 ஆம் பக்கம் பார்க்க



# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் நானே

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

இலங்கையில் இருக்கக் கூடிய அரசியல் கட்சிகள் பல, எனக்கே ஆதரவானவை. எனவே இலங்கை அரசியலில் நானே பொதுவேட்பாளர். எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாக தான் போட்டியிடுவார் என்றும் அறிவித்துள்ளார். பொல்ஹாவெலவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் தாமே பொது வேட்பாளர்கள் என்று கூறிவருகின்றனர். உண்மையில்

19 ஆம் பக்கம் பார்க்க

- சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட -

# சப்ரகமுவ பல்கலை மாணவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்ட சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு அடையாளம தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டம், பம்பஹின்ன சந்தியில் கூடாரம் அமைத்து சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய குழுவினர், சத்தியாகிரக கூடாரத்தையும் அடித்து நொருக்கி பெற்றோல் குண்டு வீசித் தீவைத்துள்ளதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் 12 பேரும் வெளியார் இருவரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மாணவர்களில் 6 பேர் தொடர்ந்தும் பலாங்

19 ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்கான செயற்றிட்டங்கள் கிளிநொச்சியில் இன்று கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு இன்றையதினம் வருகைதரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் பங்கு பற்றி மக்களுக்கான பல செயற்றிட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இன்றுகாலை 9 மணிக்கு விமானம் மூலம் இரணைமடு விமானநிலையத்தில் வந்திறங்கும் ஜனாதிபதி 9.30 மணிக்கு இரணைமடுவிலுள்ள நெலும் பியச மண்டபத்தில் வைத்து கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 1000 பேருக்கு 100 மில். ரூபாவை இழப்பீடாக வழங்கவுள்ளார்.

தொடர்ந்து 10.50 -11.50 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வடமாகாணத்தைச்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியத்தூதுவரும் பங்கேற்பு

பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, ஆரம்பித்து வைப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் முற்பகல் 10.30 மணிக்கு யாழ். பிரதான ரயில் நிலையத்தை வந்தடையும். இதே வேளை, வரும் வழியில் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய ரயில நிலையங்களையும் ஜனாதிபதி திறந்துவைக்கவுள்ளார்.

# நந்திக்கடலில் மீன்பிடிக்க மறு அறிவித்தல்வரை தடை

முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடலில் தொழில் செய்யும் மீனவர்கள் மறு அறிவித்தல் வரும் வரை குறித்த கடலில் மீன்பிடிக்க வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, வட்டுவாகல் கிராமிய கடற்தொழில் மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் வைரையா மாயான்டி அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளுக்கு அமையவே தமது சங்கம் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். - கொழும்பு ரயில் சேவை நேர அட்டவணை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நாளையதினம் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பின்னர், நாளை மறுதினம் முதல் யாழ். கொழும்பிற்கான நான்கு சேவைகள் இடம்பெற புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளதுடன், அதற்கான நேர அட்டணையும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நகர் சேர் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் கொழும்பிலிருந்து காலை 5.35 இற்கு புறப்பட்டு யாழ்ப்பாணத்தை 11.56 இற்கு வந்தடையும், அதே போல் யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 13.45 இற்கு புறப்படும்

19 ஆம் பக்கம் பார்க்க





# பரிசளிப்பு விழா

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய வருடாந்த பரிசில் தின நிகழ்வுகள் எதிர்வரும் 15 ஆம் ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு வித்தியாலய அதிபர் தஅ.ஆனந்தராஜா தலைமையில் பிரதான அரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் திறமையாகச் செற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (03)

# குழந்தைகளுடன் குழந்தை மா.சண்முகலிங்கம்

(திருநெல்வேலி)

தேசிய வாசிப்பு மாத நிகழ்வை முன்னிட்டு கொக்குவில் பொதுநூலகத்தினால் குழந்தைகளுடன் குழந்தை ம.சண்முகலிங்கம் என்னும் தலைப்பில் மழலைகள் மனம் களிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

நூலகப் பொது மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கமலேஸ்வர சர்மா தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் விருந்தினர்களாகக் குழந்தை ம.சண்முகலிங்கம், கொக்குவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி இராகவன், ஓய்வுபெற்ற யாழ்.பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர் திருமதி விமலராணி வேலுதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர்களுக்கான கிரகித்தல் தன்மை, நாடகம் நடித்தல் கதை சொல்லுதல், பாட்டுப் படித்தல் போன்றவை உட்பட சிறுவர்களை மகிழ்விக்கும் பல்வேறு நிகழ்வுகளையும் குழந்தை ம.சண்முகலிங்கம் நெறிப்படுத்தி அவர்களை மகிழ்வித்தார்.

கொக்குவில் பொது நூலக நூலகர் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். (137)

# நவாலி ஆயுர்வேத இலவச சேவையை மேலும் இருநாட்கள் அதிகரிக்க வேண்டும்

## பொது அமைப்புக்கள் கூட்டாக கோரிக்கை

(நவாலி)

நவாலி ஆயுர்வேத மத்திய மருந்தக இலவச வைத்திய சேவையை மேலும் இரு நாட்கள் அதிகரிக்க வேண்டும். என நவாலியில் உள்ள பொது அமைப்புக்கள் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தை கோரியுள்ளனர்.

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தின் கீழ் ஆயுர்வேத இலவச மருந்துவ சேவை இடம்பெறுகிறது.

மேற்படி இலவச வைத்திய சேவையானது வடமாகாண ஆயுரவேத பணிப்பாளரின் முழுமையான அனுமதியுடன் வாரத்தில் திங்கட்கிழமை, வியாழக் கிழமை ஆகிய இருநாட்கள் இடம்பெறுகின்றன.

வலி.தென்மேற்கில் உள்ள மக்கள் நவாலி கொத்துக்கட்டி வீதியில் ஹேமலதா ச.ச.நிலையத்தில் உள்ள இலவச ஆயுர்வேத மருத்துவ சேவையை திங்கள் மற்றும் வியாழன் ஆகிய இரு நாட்களில் மட்டுமே பெற்று வருகின்றனர்.

மேலதிகமாக இரு நாட்களை அதிகரித்து வழங்க நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ச.ச. நிலையம் முன்வரவேண்டும் என நவாலி பொது அமைப்புக்கள் கேட்டுள்ளன.


மேற்படி விடயம் தொடர்பில் ஆய்வு செய்த பின்னர் வடமாகாண சுதேச ஆயுர்வேத பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவர ஹேமலதா ஞாபகார்த்த ச.ச.நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

# நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (105)

# ஊடகவியலாளர் சச்சி ஐயாவின் இறுதிக்கிரியைகள் இன்று



(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயா.சச்சிதானந்தத்தின் இறுதிக் கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளன.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் சுண்டுக்குழி விதானையார் ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று காலை இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தின் மூத்த ஊடகவியலாளர் ஐயா.சச்சிதானந்தம் (64 வயது) கடந்த வியாழக்கிழமை இரவு மாரடைப்பால் காலமாகியுள்ளார். முன்னாள் ஈழநாடு, தினக்குரல் ஊடகவி யலாளரான இவர், இவ்விரு பத்திரிகைகளின் விநியோக முகாமையாளராகவும் நண்ட காலம் கடமையாற்றியுள்ளார்.

ஈழநாடு பத்திரிகை அலுவலகம் பொதுநூலக எரிப்பையடுத்து தீக்கிரையாக்கப்பட்ட போது அதனுள் அகப்பட்டு தீக்காயங்களுடன் உயிர் தப்பியிருந்தார். அவரது எரியுண்ட கால் இச் சம்பவத்தின் சின்னமாக இருந்து வந்திருந்தது.

ஆரம்பம் முதல் இலங்கை வானொலியின் யாழ்.பிராந்தியச் செய்தியாள ராக இருந்து வந்த இவர் பின்னர் யாழ்.வானொலியின் யாழ்.செய்தியா ளராகவும் கடமையாற்றி வந்தார். "ஜோஸ்யர்" சோதிடப் பத்திரிகையின் ஆசிரியரான இவர் சிறந்த அறிவிப்பா ளருமாவார். ஊடகத்துறையில் பல்வேறு விருதுகளைப் பெற்றிருந்த இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

# காலபோக நெல் விதைப்பு மண்டைதீவில் ஆரம்பம்

மண்டைதீவுப் பகுதியில் நெற்பயிற்செய்கைக்கான ஆரம்பகட்ட வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் மழை பெய்ததை அடுத்து விவசாயி கள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் சில பகுதிகளில் நெல் விதைப்பும் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மண்டைதீவின் வடக்குப் பக்கமாக பிரதான வீதிக்கு கிழக்காக உள்ள வயல்நிலங்கள் இவ்வாறு விவசாயிகளினால் உழுது பண்படுத்தப்பட்டு நெல்விதைப்பு நடைபெற்று வருவதாக தெரிவிக்கபடும் அதேவேளை நெல் விதைப்பின் பின்னர் அங்குள்ள கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலையில் விவசாயிகள் உள்ளனர் கடந்தவருடம் நெற்பயிர்ச் செய்கையை இந்தக் கட்டாக்காலி மாடுகள் நாசம் செய்து விவசாயிகள் நஷ்டம் அடைந்திருந்தமை தெரிந்ததே. (பா)


## டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3727)


# குப்பிளான் வாசிக்கு அதிஷ்டம்

நியத்தஜெய அதிஷ்டலாபப் பரிசுச் சீட்டில் குப்பிளான் வாசியொருவருக்கு 50.000 ரூபா பரிசு கிடைத்திருக்கிறது.

மூன்று இலக்கங்களும், ஆங்கில எழுத்து ஒன்றும் சரியாகப பொருந்தியதினால் இவர் இப்பரிசுக்குரியவராகத் தெரிவானார். கடந்த செவ்வாய்க்கிழமை அதிஷ்டம் பார்க்கப்பட்ட இச் சீட்டிலேயே இவருக்கு இவ்வதிஷ்டம் கிடைக்கப்பெற்றது.

இச்சீட்டினை சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் அதிஷ்ட்ட சீட்டுக்கள் விற்பனை செய்யும் வைத்திலிங்கம் நடராஜா என்பவரிடம் இவர் பெற்றுக்கொண்டார். (137)


அனைவருக்கும் பகிரப்பட்ட விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசு ...ப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 298 |
| திகதி - | 2014.10.10 |
| வர்ணம் - | நீலம் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

22 24 25 36 B

பரிசுத் தொகை ரூபா. 15,024,360/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 08 | 400,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 206 | 206,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 392 | 392,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9341 | 560,460/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4943 | 197,720/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 122406 | 2,448,120/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17554 | 351,080/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 15,024,360/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,555,380/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 15,263,980/-

2014.10.14ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3536)


# ஐயா சச்சிதானந்தத்தின் மறைவு பேரிடியை ஏற்படுத்தி விட்டது

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அனுதாபம்

வடமாகாணத்தில் பத்திரிகைத்துறையில் அணையா ஜோதியாக பிரகாசித்து நின்றவரும் பத்திரிகைத்துறையில் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவருமாகிய ஐயா சச்சிதானந்தன் மறைவெய்தியமை எமக்கு பேரிடியை ஏற்படுத்திவிட்டது என வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்ப்பணத்தில் முன்னணியில் திகழும் பத்திரிகைகளை வளர்த்தெடுத்த பெருமை சச்சியையே சேரும். அவர் தான் வளர்த்த பத்திரிகை ஒன்றை காலை தோறும் கடைகளுக்கு எடுத்துச் சென்று அதன் விற்பனையை பெருக்கினார். இவர் சிறந்த செய்தியாளராகவும் விற்பனையாளராகவும் விளங்கியதோடு ஒப்பற்ற ஒலிபரப்பாளராவும மிளிர்ந்தார். இவர் ஒரு சிறந்த சோதிடர் என்பது பலருக்கு விற்பனையாளராகவும் தெரியாது.

இவர் பத்திரிகைளை வளர்த்தெடுப்பதில் மட்டுமல்ல துடிப்புள்ள இளைஞர்களை பத்திரிகைக் கடலில் நீந்த வைத்து பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தார். ஊடகவியலாளர்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வடபகுதியில் வடமாகாண பத்திரிகையாளர் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகவும் செயலாற்றினார். இவர் வானொலியில் சிறப்புமிக்க அறிவிப்பளராகவும் செய்திப்பகுதி பொறுப்பாளராகவும் பணியாற்றினார். இவர் எமது மத்தியில் இருந்து பிரிந்ததுடன் அவரின் குரலை தினமும் கேட்க காத்து நிற்பவர்களின் உள்ளத்தில் ஒரு பேரிடியை ஏற்படுத்தி விட்டு எதிர்பாராத விதமாக இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவரின் ஆத்மா மோட்சமடைய இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலோலியில் தாக்குதல்

புலோலியில் ஆனைவிழுந்தான் சந்தியில் நேற்று மாலை 6 மணியளவில் சதானந்தன் கேசவன் (வயது 64) என்பவர் துவிச்சக்கரவண்டியில் வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயவழி பாட்டுச்சபை உறுப்பினரும் இளைப்பாறிய மின்சார சபை ஊழியரும் சமாதான நீதிவானுமான இவர் நேற்று ஆலயத்திலிருந்து வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது வழி மறித்து தாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பருததித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன் பருத்தித் துறை வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளார. (18)

# ஆசுகவி சிவசுப்பிரமணியத்தின் 'வழித்துணை' நூல் வெளியீட்டு விழா

## இன்று சுழிபுரம் றிஸ்லே மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் அவர்களின் உருவாக்கத்தில் வெளியான "வழித்துணை" நூல் வெளியீட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் இன்று பி.ப 2 மணிக்கு சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் றிஸ்லே மண்டபத்தில் இவ்விழா இடம்பெறும். ஆசியுரையினை பிரம்மஸ்ரீ சி.ஜெயானந்தசர்மா, அருட்தந்தை செபஸ்ரியான் அன்ரனி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை ஆனைக்கோட்டை அரசினர் வைத்தியசாலை வைத்தியகலாநிதி ஆ.காந்தநேசன், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராஜா, சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, பிரதேச செயலர் அ.சோதிநாதன், தவிசாளர் திருமதி.ஐ.நாகரஞ்சினி, கல்லூரி முதல்வர் திருமதி.ச.சிவகுமார், அதிபர் திருமதி.ச.சிவமலர் சுந்தரபாரதி வலிகாமம் அமைப்பாளரும் வலி.மேற்கு எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), கிராம அதிகாரி இ.ஸ்ரீரஞ்சினி ஆகியோர் வழங்குவர்.

வரவேற்பு நடனத்தை நாட்டியக் கலைமாணி திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் ஆசிரியையின் 'சத்தியபரத கலாலய' மாணவிகள் வழங்குவர்.

வரவேற்புரையை கலைமாணி திருமதி.பங்கயற்செல்வி யோகநாதன் ஆசிரியை வழங்குவார். வழித்துணை நூலின் அறிமுக, உரையினை யாழ். பல்கலைக்கழக 'மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வம் கண்ணதாசனும் நூல் மதிப்பீட்டு ஆய்வுரையினை யாழ்பல்கலைக்கழக, நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் திருமதி.ஏ.என்.கிருஸ்ணவேணியும் வழங்குவர்.

கலைஞர் கௌரவிப்பினைத் தொடர்ந்து ஆசுகவி.செ.சிவசுப்பிரமணியம் அவர்களின் ஏற்புரையுடன் விழா நிறைவுறும். மங்கள இசையினை நாதஸ்வர மேதை இரா.சிவகுமார் குழுவினர் வழங்குவர்.



சமூகச்சுடர் பிரம்மஸ்ரீ வரதராஜக் குருக்கள் ஸ்ரீகாந்தம் அதிபர் தொடர்பான மலர் வெளியீட்டு விழா சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியில் அதிபர் திருமதி.ச.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது. 'ஸ்ரீகாந்தம்' மலரை பறலாய் முருகன் தேவஸ்தான ஆலய பிரதம குருவும் மூத்த சிவாச்சாரியுமான பிரம்மஸ்ரீ மு.பாலகுருசாமி சர்மா வெளியிட்டு வைப்பதனைக் காணலாம். (படம்:இரா.சுதா)

# பணிப்பாளர் ஸ்ரீவிக்கினேஸ்வரன் சைக்கிள் வழங்கி கௌரவிப்பு

## நவாலி மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில்

நவாலி மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் முதல்வர் இரா.வசந்தகுமார் தலைமையில் வெகு சிறப்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட காரைநகர் கோட்டக்கல்வி பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கு "சுலோசனா ஞாபகார்த்த" துவிச்சக்கர வண்டிகளை பரிசாக வழங்கி சிறப்புரையாற்றினார்.

அன்றைய தினம் புகழ்பூத்த கவிஞர் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் சிலைக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் மாலை அணிவித்து கௌரவித்தார். நிறுவுநர் தம்பையா பண்டிதரின் உருவச்சிலைக்கு வர்த்தன வங்கி முகாமையாளர் இரவீந்திரா மாலை அணிவித்து கௌரவித்தார். அதிபர் அறிக்கையை பாடசாலை முதல்வர் இரா.வசந்தகுமாரும், உப அதிபர் திருமதி.குமரேசமூர்த்தியும் வாசித்து வழங்கினர்.

# வலி.கிழக்கு சபையில் பங்கேற்பு திட்டம்

## இன்றும் – நாளை மறுதினமும்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் (LAPDP) தயாரிக்கப்படவுள்ளது.

இத்திட்டத் தயாரிப்பின் போது மக்கள், ஆலய பிரதிநிதிகள், பங்குத் தந்தையர், பொது அமைப்பின் பிரதிநிதிகள், சபை உறுப்பினர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு தங்கள் திட்டங்களை முன் வைக்க வேண்டும்.

இவ்வாறு வலி.கிழக்கு பிரதேச சபை தலைவர் செயலாளர் கூட்டாக கேட்டுள்ளனர்.

இந் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 7 மணிக்கு ஜே/267 ஊரெழு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட ஊரெழு கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறும்.

அதேவேளை நாளை மறுதினம் ஜே/263 உரும்பிராய் மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டமும் இடம்பெறும்.

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் – 05




'இந்தியாவை நம்பிப்பிரயோசனம் இல்லையெண்டால், சர்வதேச சமூகத்தைத்தானே நம்ப வேணும்!' எண்டு கனபேர் கேட்கினம்.

சர்வதேச சமூகம் நிச்சயமாக இந்தப் பிரச்சினையில தலையிட்டு ஏதோ ஒரு நல்ல தீர்வைத்தரும் எண்டும் அவை நம்புகினை.

'இலங்கை அரசாங்கத்தின்ரை போர்க்குற்றங்களை விசாரிச்சு, தண்டனையைக் குடுக்கேக்க இப்ப ஆட்சியில இருக்கிற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கதையும் முடிஞ்சிடும். அதுக்குப் பிறகென்ன? தமிழீழம்தான். ரணில் ஒரு அருமையான மனிசன். அதையும் விட சரத் பொன்சேகா சோக்கான ஆள். அதையும் விட ஜே.வி.பி திறம். சர்வதேச சமூகமும் மகிந்தரைக் கவிழ்த்த பிறகு சரத்பொன்சேகாவையோ ரணிலையோதான் கதிரையில அமர்த்தும். அப்ப தமிழீழத்தைச் சுகமாகப் பெற்றுக்கொள்ளலாம். அப்பிடியில்லையெண்டாலும் மாகாணசபையையும் விட்ச் சமஸ்டியை அல்லது சுயாட்சியை எடுத்துக்கொள்ளலாம்.....' இப்பிடித்தான் பெரும்பாலான தமிழாக்களும் தமிழரசுக் கட்சிக்காரரும் நம்பிக்கொண்டிருக்கினம்.

இப்பிடி நம்பிறதாலதான் இவை மகிந்தரை உச்சிக்கொப்பில நிண்டுகொண்டு எதிர்க்கினம். இந்த நம்பிக்கையிலதான் இவை ரணிலை ஆதரிக்கிறதும் சரத்தோட கூட்டு வைக்கிறதுக்கு விரும்பிறதும் நடக்குது.

ஆனால், சர்வதேச சமூகம் ஏதோ தமிழாக்களுக்காகவோ தமிழற்றை பிரச்சினைக்காகவோ இலங்கை அரசாங்கத்தோட முறுகேல்ல. தமிழ்ச்சனங்களுக்கு ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக்குடுக்க வேணும் எண்டும் இலங்கை அரசாங்கத்தோட பிரச்சினைப் படேல்ல. இத்தனை காலமாக தமிழ்ச்சனங்கள் பெரிய துன்பங்களை எல்லாம் அநுபவிச்சுப்போட்டு, இன்னும் நிம்மதியில்லாமல் அலைஞ்சு கொண்டிருக்குதுகள் எண்டு நினைச்சு, தமிழாக்களின்ரை நீதிக்காக மகிந்தரோட பகைக்கேல்ல.

சர்வதேச சமூகத்தின்ரை பிரச்சினை எல்லாம் தங்கட நலனுக்காகத்தான்.

இந்தியா எப்பிடித்தன்ரை நலன்களுக்காக பாடுபடுகிதோ அப்பிடித்தான் இந்த மேற்குலகமும் தன்ரை நலனுக்காகப் பாடுபடுகுது. அப்பிடித்தான் சீனாவும் சரி பிற நாடுகளும் சரி தங்கட நலனுக்காகவே இலங்கையில் அக்கறைப்படுகின்றன.

இது சின்னப்பிள்ளைக்கும் விளங்கக் கூடிய சங்கதி.

இதில நாங்கள் ஒரு விசயத்தை – ஒரு உண்மையை விளங்க வேணும்.

இந்தச் சர்வதேச சமூகம் எண்டிறது அநேகமாக மேற்குலகத்தையும் அதைச்சார்ந்த அமைப்புகளையும்தான் குறிக்குது.

அப்பிடித்தான் எங்கட அரசியல்வாதிகள் தொடக்கம் சனங்கள் வரையில பத்திரிகைகள் தொடக்கம் அறிஞர்கள் வரையில விளங்கி வைச்சிருக்கினம்.

இதைவிட பாகிஸ்தான், ஈரான், கியூபா, ரஷ்யா, இந்தியா, சீனா போன்ற நாடுகளையெல்லாம் நாங்கள் சர்வதேச சமூகம் எண்ட கணக்கில எடுக்கிறேல்ல.

அதால இந்த நாடுகள் என்னமாதிரியான நிலைப்பாட்டை எடுக்கின்றன எண்டும் நாங்கள் பாக்கிறேல்ல.

இலங்கையின்ரை போர்க்குற்றங்களைப் பற்றிய தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரேக்க, இலங்கைக்கு ஆதரவாக பல நாடுகளும் நடுநிலைமையில பல நாடுகளும் நிண்டன.

சர்வதேச சமூகம் எண்டால் ஏதோ ஒரு அணியில எல்லா நாடுகளும் நிக்கும் எண்டு நாங்கள் கருத முடியாது.

அதில பல அணிகள், பல நிலைப்பாடுகளோட பல நாடுகள் இருக்கும்.

ஒவ்வொரு தரப்புக்கும் அதிகாரப் பலமும் இருக்கும்.

இலங்கைக்கு எதிராக – மிகப் பாதகமாக ஒரு தீர்மானத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் அதுக்குச் சேவகம் செய்யிற ஐ.நாவும் கொண்டு வருமெண்டால் சீனாவும் ரஸ்யாவும் தங்களின்ரை வீற்றோப்பவரைப் பாவிச்சு அதைத் தடுக்கலாம்.

இப்பிடித்தான் நிலைமை இருக்கு.

சரி, இதையெல்லாம் கடந்து போர்க்குற்ற விசாரணைகளைச் செய்து மகிந்த ராஜபக்ஷ தரப்பைக் குற்றவாளிக்கூண்டில நிப்பாட்டினால் தமிழற்றை – முஸ்லிம் மக்களின்ரை பிரச்சினை தீர்ந்திடுமா?

அப்பிடித் தீருமென்றால், அது எப்பிடித்தீரும்?

இதை ஆராவது கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது.

சீனாவுடன் இலங்கை அரசாங்கம் இந்தப் பத்து ஆண்டுகளில வலு நெருக்கமாக இருக்குது. இதை இந்தியாவுக்கும் பொறுக்கேலாமல் இருக்கு. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலகத்துக்கும் பொறுக்கேலாமல் கிடக்கு. ஏன், யப்பானுக்கே இது கொஞ்சம் கசப்பாகத்தானிருக்கு.

இதுக்கு முந்திய இலங்கையில இந்த நாடுகள்தான் பெரும் செல்வாக்கைச் செலுத்தினதுகள்.

இந்தப் பத்தாண்டுகளில இது தலைகீழாகி விட்டுது.

ஆனால், இந்தக் காரியத்தைத் தொடக்கி வைச்சது – இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை நெருக்கமாக்கி வைச்சது சந்திரிகாவைச்சாரும்.

அவதான் இந்த முடிச்சைப்போட்டவ.

இப்ப அதைவைச்சுக்கொண்டு ஆயிரம்வேலைகளைப் பார்க்கிறார் மகிந்தர்.

மகிந்தரில ஆயிரம் பிழையிருக்கலாம். ஆனால், என்ன இருந்தாலும் அவருடன் பேசிப்பறைஞ்சுதான் எதையும் செய்ய வேண்டியிருக்கு.

இதாலதான் மகிந்தரோட மோடியும் கைகுலுக்கிறார். ஒபாமாவும் படமெடுக்கிறார். நவிப்பிள்ளை அம்மாவும் ஒண்டாகத் தேத்தண்ணி குடிச்சா. ஐ.நா செயலர் பான்கி மூனும் கட்டித்தழுவுகிறார். பாப்பரசரும் ஆசீர்வதிச்சார்.

ஆனால், கொஞ்சத் தமிழர் மட்டும் முகத்தைச் சுழிக்கினம்.

சந்தேகம், நம்பிக்கைக்கு எதிரானது அல்ல. அதன் ஒரு பாகமே. - உளநோக்கு.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யாழ்ப்பாணத்துக்கு வரும் ரயில்!

இருபத்துநான்கு வருடங்களின் பின் நாளை யாழ்ப்பாணத்திற்கும் தென்பகுதிக்குமிடையிலான ரயில் சேவை ஆரம்பிக்கிறது. யாழ்ப்பாணம் மத்திய ரயில் நிலையத்தை நாளை இடம்பெறவிருக்கும் சிறப்பு வைபவத்தின் போது ஜனாதிபதி மக்களிடம் கையளிக்கிறார்.

இந்த ரயில் விஷயத்திலும் நமது தமிழ் ஊடகங்களும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களும் வாக்குகளுக்காய்ப் பறக்கும் இன்னபிற வால்களும்... அரசைக் கரித்துக் கொட்டுவதற்கு வசதியாக நமது மூக்குகளை அரிந்து கொண்டாலும் பரவாயில்லை என்ற ஒப்பற்ற தமிழ்ப் பண்பைக் காட்டிக் கொண்டனர்.

இராணுவத்தினர் வந்து போவதற்கு வசதியாகவே அவசர அவசரமாக ரயில்பாதை போடப்படுகிறது என்பதில் ஆரம்பித்து, தண்டவாளத்தில் காலாற நடக்க விரும்பும் தமிழ் மாடுகளையெல்லாம் இவர்களின் ரயில் அடித்துக் கொல்கிறதே ஐயகோ... என்பது வரைக்கும், யாழ்ப்பாணத்திற்கு ரயில் விடுவதிலுள்ள அரசின் சதி குறித்து எத்தனை எத்தனை ஆராய்ச்சிக் கட்டுரைகளும் புலம்பல்களும்!!

ரயில் நிலையத்தைக் கையளிக்க ஜனாதிபதி வருகிறார் என்பதால் தான் அவசர அவசரமாக யாழ் ரயில் நிலையம் புதுப்பிக்கப்படுகிறது என்பதாகவும் யாழ்நகர் அழகுபடுத்தப்படுவது குறித்தும் 'நாம் தமிழர்' பண்பை வெளிக்காட்டும் கிண்டல்களும் விண்ணாணங்களும் எத்தனையெத்தனை!!

'வலிகாமத்தில் படையினர் முகாம்கள் உள்ள இடங்களில் மக்களை இன்னும் முழுமையாக மீள்குடியமர்த்த முடியவில்லை... இந்த லட்சணத்தில் நமது மக்களுக்கு ரயில் ஒரு கேடா?' என்று அந்தமாதிரி ஒரு அப்புக்காத்து மடக்கல் கேள்வி!

மக்களுக்கு எந்த வசதி வாய்ப்புகளும் கிடைத்துவிடக் கூடாது; வசதிகள் அவர்களின் ஆக்ரோசத்தைக் குறைத்துவிடும்; ஆக்ரோசம் குறைந்து விட்டால் எடுக்கக் கூடிய அதிகாரங்களை எடுத்து நாம் நல்லபடியாக வாழ்வதற்கான வழியைப் பார்க்கலாமே என்று எண்ண ஆரம்பித்து விடுவார்கள்.

அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அவர்களது ஊடகங்களுக்கும் இத்தனை பதற்றம்! ஜனாதிபதி தலைமையில் நடைபெறவிருக்கும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்தையும் புறக்கணிக்கிறார்கள்.

புறக்கணிப்பதற்குக் கண்டுபிடிக்கும் காரணங்கள் தான் அற்புதமானவை. தெனாலிராமன் குதிரை போல முன்னால் போனால் முட்டுவதும் பின்னால் போனால் உதைப்பதுமாக, ஏதோ ஒன்றைச் சொல்லி அபிவிருத்திக் கூட்டங்களில் பங்குகொள்ளப் பின்னடித்து வருகிறார்கள்.

இம்முறை அழைப்பிதழின் உள்ளே பெயரைப் போடவில்லை என்பதால் வரமுடியாது என்று மறுத்திருக்கிறார்கள். உள்ளே பெயர் எழுதாமல் விட்டது, அபிவிருத்தியைப் புறக்கணிப்பதற்கு என்ன ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது!

உள்ளே பெயர் எழுதப்பட்டிருந்தால் என்ன சொல்ல வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாதா என்ன? எழுத்துப் பிழையாக வந்துவிட்டது என்றோ, நீலக் கலரில் எழுதாமல் கறுப்புக் கலரில் எழுதப்பட்டிருக்கிறது என்றோ சொல்ல முடியாதா என்ன? அதெல்லாம்தான் இல்லாவிட்டாலும் நேரத்திற்குக் கடிதம் கிடைக்கவில்லை என்று ஒரே போடாகப் போட்டுவிடலாமே!

மக்களுக்கு அபிவிருத்திகள் நடப்பதும், அவர்களுக்குரிய வாழ்க்கை வசதிகள் பூர்த்தியாவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியலுக்கு குந்தகமானது. மக்கள் எப்போதும் [illegible]றைகள் தீராமல் வதங்கியபடி இருப்பதுதான் அவர்களது [illegible]சியலுக்கு வாய்ப்பானது.

அதன[illegible] தான் காப்பெற் வீதிகள் எதற்கு? ரயில் எதற்கு? மக்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் எதற்கு? என்றெல்லாம் கேட்கிறார்கள். அபிவிருத்திக் கூட்டங்களையும் புறக்கணிக்கிறார்கள்.

\- ஆசிரியர்

# இராஜ தந்திர சேவையில் தகுதியற்ற நபர்கள் தாராளம்

## நாட்டுக்கு அவமானம் என்று கண்டனம்

(கொழும்பு)

தகுதியற்ற நபர்களிடம் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர சேவைகள் இருப்பதால் முழுநாட்டுக்கும் அவப்பெயர் ஏற்பட்டிருப்பதாக ஜே.வி.பி. கண்டனம் தெரிவித்துள்ளது.

"சாதாரணதரப் பரீட்சையிலேயே சித்தியடையாத சிலரிடம் வெளிவிவகார சேவை ஒப்படைக்கப்பட்டுள்ளது."

எனவே அதில் வீழ்ச்சி ஏற்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை." -இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை சபை ஒத்திவைப்புவேளை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்குமேலும் தெரிவிக்கையில்:- உயர்ஸ்தானிகர் ஒருவர் தாக்கப்பட்டமை "ஒட்டுமொத்த நாட்டையும் துரதிரஷ்ட நிலைக்குள் தள்ளியுள்ளது. சர்வதேச ரீதியில் நாடு தனிமைப்படுத்தப்படாமல் பாதுகாக்கும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சுக்கு உள்ளது. இந்தப் பொறுப்பிலிருந்து தவறுவதை எதிர்க்கவேண்டும். சாதாரணதரப் பரீட்சையில் கூட சித்தியடையாத ஒருவரிடம் வெளிவிவகார சேவை ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே அதில் ஏற்படும் வீழ்ச்சி பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. எனினும், சர்வதேச ரீதியில் இது நாட்டுக்குப் பேரவமானம் ஆகும்" - என்றார்

# பங்காளிக்கட்சிகள் புறக்கணிப்பு; அரசு மீது சம்பிக்க சீற்றம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் சம்பந்தமாக தான் வெட்கப்படுவதாகவும் அதே போல் ஆத்திரமடைந்துள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார். ஆளும் கட்சியின் கூட்டணிக் கட்சிகளுக்கும் அரசாங்கத்துடன் பிரச்சினைகள் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தப் போகின்றனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் அலுவலகம் ஒன்றையும் திறந்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கும் தயாராகி வருகின்றனர். ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணிக் கட்சித் தலைவர்களை அழைத்து பேசி தீர்மானங்களை எடுக்கவில்லை.

ஏன் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகிற[illegible] என்பதற்கு பதில் இல்லை எனவும் சம்பிக[illegible] ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

# சிவில் விவகாரங்களில் படைத்தரப்பின் தலையீடு

## வர்த்தமானி அறிவித்தலை தவிர்க்ககோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சிவில் விவகாரங்களில் படைத்தரப்பினர் தலையிடும் வகையிலான வர்த்தமானி அறிவிப்புக்களை தவிர்க்க வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமையை நிலைநாட்டும் நோக்கில் சில வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு வருகின்றது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இராணுவத்தினரை ஈடுபடுத்தும் நோக்கில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது முதல் மாதாந்த வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் படையினர், மக்கள் போராட்டங்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அமைதியை பேணிப்பாதுகாக்கும் நோக்கில் படையினரை ஈடுபடுத்த இந்த சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நாட்டின் 25 மாவட்டங்களிலும் பட[illegible]யினரை சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் நோக்கில் ஈடுபடுத்திக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய மட்ட விருதுக்கான இளைஞர்களுக்கான போட்டி

## முல்லையில் விரிவான ஏற்பாடுகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்படும் 2014 ஸ்ரீலங்கா யூத் தேசிய விருதுப் போட்டியின் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான போட்டி, எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தா தேசிய பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே மாற்றுத் திறனுடைய (Differently Abled) இளைஞர், யுவதிகளுக்கான போட்டிகள் நடாத்தப்பட்டுள்ள நிலையிலேயே தமிழ், ஆங்கில மொழிகள் மூலமான பின்வரும் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தமிழ் மொழியில் அறிவிப்பாளர், பேச்சு, இளம் பாடகர், கிராமியப் பாடல், கிராமிய நடனம், புத்தாக்க நடனம், பரத நாட்டியம், கதக், அபிநய நாடகம், சாஸ்திரிய இசை, மேலைத்தேய இசை போன்ற போட்டிகளும் ஆங்கில மொழியில் அறிவிப்பாளர், பேச்சு, இளம் பாடகர் போட்டிகளும் இடம்பெறவுள்ளது.

இதே வேளை சிங்கள மொழி மூலமான போட்டிகள் விரைவில் வெலிஓயாவில் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், பின்வரும் போட்டிகளுக்கான ஆக்கங்களை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்டப் பணிமனை, ஏ 9 வீதி, மாங்குளம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு தபால் மூலமும் பிரதேச செயலகங்களில் இளைஞர் சேவை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவும் முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சாகித்திய போட்டிகளான நாவல், சிறுகதை, கட்டுரை, பாடலியற்றல், வா[illegible] நாடகம், தொலைக்காட்சி நாடகம், சிறு[illegible] யம் (கவிதை, கதை) போன்ற போ[illegible] தமிழ், சிங்கள பொதுப் போட்டிகள[illegible] புகைப்படம், சிற்பங்கள் போ[illegible] கும் உரிய ஆக்கங்களை எதி[illegible] 20.[illegible] திக்கு முன்னர் அனுப்பி[illegible] வேண்டுகோள் விடுத்துள்ளார்

சகல போட்டிகளிலும் 15 மு[illegible] குட்பட்ட இளைஞர் யுவதிகள் பங்குகொ[illegible] எனவும் நாடகப் பிரிவுப் போட்டிகளுக்கு 15 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0212060017/0772350374 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

# ஏமாற்று அரசியல் செய்பவர்களால் தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை

சங்கர சிவன்



**கூட்டமைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை. ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்தி வர்க்க அரசியலுக்கு வலுச்சேர்ப்பது சிலரின் தேவை. புலம்பெயர் அமைப்புக்கள் மூலம் கிடைக்கும் வசதிவாய்ப்புகளை அனுபவித்துக்கொண்டு அறிக்கைகள் மூலமும் ஆவேசப் பேச்சுக்கள் மூலமும் நாடாளுமன்றக் கதிரைகளைக் காப்பாற்றுவது வேறு சிலரின் தேவை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தேவை இவர்களில் ஒருவருக்கும் இல்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று மக்களை ஏமாற்றிக்கொண்டு தங்கள் சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் நீண்ட காலமாக இருந்து வரும் பனிப்போர் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக வெளியரங்குக்கு வருகின்றது. முதலாவது அம்பை முதலமைச்சர் விக்கினேஸ்வரன் எய்திருக்கின்றார். ஆயுதம் ஏந்தி போராடியவர்களுடன் சேர்ந்து செயற்பட முடியாது என்ற அவரது "லேற்றஸ்ற்" ஞானோதயம் சொந்தச் சரக்கல்ல.

புலிகளின் மேலாதிக்க அழுத்தம் காரணமாகவே வெவ்வேறு கட்சிகள் கூட்டமைப்பாக ஒன்றிணைந்தன. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை எதிர்த்து அரசியல் தீர்வைக் குழப்ப வேண்டிய தேவை புலிகளுக்கு இருந்தது. புலிகளின் வாலைப் பிடித்தாவது நாடாளுமன்றத்துக்குப் போக வேண்டிய தேவை மற்றவர்களுக்கு இருந்தது. இத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக கூட்டமைப்பு உதயமாகியது. ஆரம்பத்தில் இலை மறை காயாக இருந்த தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கம் புலிகளின் தோல்விக்குப் பின் வெளிப்படையாக தலைதூக்கியது. முதலில் இதற்குப் பலியாகியவர்கள் தீவிர புலி ஆதரவாளர்களான கஜேந்திரகுமார், பத்மினி கொம்பனி.

முன்னாள் ஆயுதக் குழுக்களை எப்படியாவது கழற்றி விடுவது தமிழரசுத் தலைவர்களின் அடுத்த இலக்கு. அந்த இலக்கை நோக்கிய முதலாவது காய்நகர்த்தல் தான் ஆயுதக் குழுக்கள் மீது விக்கினேஸ்வரனின் பாய்ச்சல். தமிழரசுக் கட்சித் தலைமை விக்கினேஸ்வரனை அப்படிப் பேச வைத்துவிட்டு பின்விளைவுகளை அவதானிக்கின்றது. விக்கினேஸ்வரனுக்கு இலகுவாகத் 'தலைப்பாகை' கட்டலாம் என்பது தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு தெரியும். யாராவது குஞ்சங் கட்டிவிட முன்பின் யோசிக்காமல் பேசி வாங்கிக் கட்டுவது விக்கினேஸ்வரனுக்கு வழக்கமாகி விட்டது.

விக்கினேஸ்வரன் எய்த அம்பின் வேகம் தணிவதற்கிடையில் கூட்டமைப்பைத் தனிக்கட்சியாக பதிவு செய்ய முடியாது என்று அடுத்த கணையை விட்டார் மாவை சேனாதிராசா. தமிழரசுக் கட்சி தங்களைத் திட்டமிட்டுச் சீண்டுகின்றது என்பதை விளங்கிக்கொண்ட முன்னாள் போராளி அமைப்புகள் எதிர்த்தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றன.

சிவாஜிலிங்கம் வழக்கம் போலச் சீறிப் பாய்ந்தார். துரோகிப் பட்டம் கட்டப்போவதாக எச்சரிக்கை செய்தார். சுரேஷ் பிரேமச்சந்திரன் அமைதியாக காய் நகர்த்துகின்றார். தமிழரசுக் கட்சியுடன் கடுமையாக முட்டி மோதினால் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிச் செல்லாக் காசு ஆகின்ற நிலை ஏற்படும் என்பது அவருக்குத் தெரியும். எனவே, கூட்டமைப்பைப் பதிவு செய்வது பற்றி மாவை தெரிவித்த கருத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும் என்று மக்களைத்தூண்டுகின்றார். அடுத்ததாக, ஆட்சி மாற்றத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்று அமெரிக்கப் பிரதிநிதிகளுக்குக் கூறியதைப் பத்திரிகைகளில் பெரிதாக வரப்பண்ணித் தமிழரசு கட்சித் தலைமையைத் தற்காப்பு நிலைக்குத் தள்ளுகின்றார்.

கூட்டமைப்பின் செல்வழியைத் தமிழரசுத் தலைமையே தீர்மானித்து வந்திருக்கின்றது. சம்பந்தனும் சுமந்திரனும் தங்கள் இஷ்டம்போலச் செயற்படுகின்றார்கள் என்று பங்காளிக் கட்சிகள் அடிக்கடி குற்றஞ்சாட்டின. எனினும் வெறும் முணுமுணுப்புடன் அந்தத் தலைமையையே எல்லோரும் பின்பற்றினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற அமைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனநாயக மக்கள் முன்னணியும் நான்கு வருடங்களுக்கு மேலாக அங்கம் வகிக்கின்றன என்பதும் அந்த அமைப்பின் பிரதான நிகழ்வுகளில் சம்பந்தன், சுமந்திரன், மனோகணேசன் ஆகியோர் பங்குபற்றுவதும் தமிழ் மக்களில் கணிசமானோருக்குத் தெரியாது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஆட்சி மாற்ற முனைப்பு மேலும் கூர்மையடைகின்றது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை மோசமாக ஏமாற்றியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தும் இலக்குடன் செயற்படுவதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு இவர்கள் கூறவில்லை. சர்வதேச சமூகத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தர முயற்சிப்பதாக மக்களை நம்பவைத்தார்கள். ஆனால் இவர்கள் மேற்கொண்ட அத்தனை செயற்பாடுகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவை நாட்டில் வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன.

அரசியல் தீர்வுக்குச் சாதகமான எதையும் செய்யக்கூடாது என்ற புலம்பெயர் அமைப்புக்களின் கட்டளை இவர்களுக்கு வாய்ப்பாகி விட்டது. அரசியல் தீர்வுக்கான கொள்கைத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. அரச எதிர்ப்புச் செயற்பாடுகளைப் பெரிதாகத் திட்டமிட்டு நடத்தினார்கள். சர்வதேசத்துடனான உறவுகளை இனப்பிரச்சினையின் தீர்வுக்காக இவர்கள் பயன்படுத்தவில்லை. அரசாங்கத்துக்கு எதிரான உணர்வலையை வளர்ப்பதற்காகவே பயன்படுத்தினார்கள். அந்த உணர்வலை வளர்வது இனப்பிரச்சினையின் தீர்வுக்கு எவ்விதத்திலும் உதவாது என்பதையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பான சூழ்நிலையை அது உருவாக்கும் என்பதையும் தெரிந்து கொண்டே செய்தார்கள். அதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அபிப்பிராயம் தமிழ்மக்கள் மத்தியில் எழுவதைத் தவிர்ப்பதிலும் இந்தத் தலைமை கவனம் செலுத்தியது. சில சரத்துகளை நீக்கும் வகையில் பதின்மூன்றாவது திருத்தம் திருத்தப்பட வேண்டும் என்று விமல் வீரவன்சவுக்கு ரணில் கூறியதை விமர்சிப்பதற்கு கூட்டமைப்புத் தலைமை விரும்பவில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் அரவது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு என்ற அமைப்பைச் சேர்ந்த சிலர் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் மகாநாட்டில் பங்குபற்றுவதற்கு ரணில் மறுத்ததையிட்டு கூட்டமைப்புத் தலைமை அலட்டிக்கொள்ளவில்லை. பொதுபல சேனாவின் அரசியலமைப்பு ஆலோசனைகளைக் கவனத்தில் எடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி இப்போது கூறியிருப்பது பற்றியும் கூட்டமைப்புத் தலைமை எதுவும் பேசவில்லை.

இந்த ஆட்சி மாற்ற அரசியலில் கூடுதலான அக்கறை செலுத்தியவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும். இது அவர்களின் வர்க்க அரசியல். தமிழரசுக் கட்சிக்கு எதிரான காய்நகர்த்தலில் ஆட்சி மாற்ற விடயத்தை இப்போது தூக்கிப்பிடிக்கின்ற சுரேஷ் பிரேமச்சந்திரனும் இதுவரை இந்த அரசியல் போக்கில் பங்காளியாகவே இருந்தவர். தமிழரசுக் கட்சியின் வலதுசாரித் தலைமையினது ஐக்கிய தேசியக் கட்சி சார்புச் செயற்பாடுகள் அனைத்துக்கும் மௌன ஆதரவு அளித்த அனைவரும் அச்செயற்பாடுகளின் பங்காளிகளே.

இப்போது தமிழரசுக் கட்சி தனது அடிமடியில் கைவைப்பதால் தான் ஆட்சி மாற்றம் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்கிறார் பிரேமச்சந்திரன். அப்படியானால் தீர்வு எது என்று அவர் கூறத்தானே வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என்று கூட்டமைப்பின் எந்தத் தலைவரும் கூறப்போவதில்லை. கூறும் நிலையில் அவர்கள் இல்லை. கூட்டமைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை. ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்தி வர்க்க அரசியலுக்கு வலுச்சேர்ப்பது சிலரின் தேவை. புலம்பெயர் அமைப்புக்கள் மூலம் கிடைக்கும் வசதிவாய்ப்புகளை அனுபவித்துக்கொண்டு அறிக்கைகள் மூலமும் ஆவேசப் பேச்சுக்கள் மூலமும் நாடாளுமன்றக் கதிரைகளைக் காப்பாற்றுவது வேறு சிலரின் தேவை. நடைமுறைச் சாத்தியமற்ற கோஷங்கள் மூலம் தலைமைக்குச் சவால் விடும் தேவையும் சிலருக்கு உண்டு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் தேவை இவர்களில் ஒருவருக்கும் இல்லை. தமிழ் மக்களுக்காக ஏதோ வெட்டிக்கிழிப்பதாக பாசாங்கு செய்துகொண்டு தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதிலேயே கூட்டமைப்புத் தலைவர்கள் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றார்கள். தமிழ்மக்கள் இவர்களில் நம்பிக்கை வைத்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எப்போதும் எட்டாக்கனியாகவே இருக்கும். தீர்வை அடைவதற்கான சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதில் இனியும் தாமதம் கூடாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரே தடவையில் அடையக் கூடியதல்ல. தமிழ்த் தலைவர்கள் சுயநல அடிப்படையில் செயற்பட்டதன் விளைவாகப் படிப்படியான அணுகுமுறைக்கூடாகவே தீர்வை அடைய வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. பதின்மூன்றாவது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு அம்சமாக இருப்பதால் அதை அரசியல் தீர்வின் ஆரம்பக்கட்டமாக ஏற்றுக்கொண்டு படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை அடைய முடியும். தீர்வில் அக்கறை உள்ளவர்கள் திரும்பத் திரும்ப இக்கருத்தைக் கூறிவருகின்ற போதிலும் கூட்டமைப்புத் தலைவர்கள் இந்த அணுகுமுறையை ஏற்கின்றார்களில்லை. அரசியல் தீர்வில் அவர்களுக்கு அக்கறை இல்லாமையே இதற்குக் காரணம். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று மக்களை ஏமாற்றிக்கொண்டு தங்கள் சொந்தத் தேவைகளை நிறைவேற்றுகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் முதலில் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்கவேண்டும். உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மாகாண சபையைச் செயற்படுத்த வேண்டும். எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் அந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி மாகாண சபைக்குக் கட்டங்கட்டமாகக் கூடுதலான அதிகாரங்களைப் பெற வேண்டும். நடைமுறைச்சாத்தியமான அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன்வைத்து அதற்குச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இதுதான் அரசியல் தீர்வை அடைவதற்கு ஆக்கபூர்வமான வழி. இந்த வழியில் செயற்படத் தயாராக உள்ள தலைமையே தமிழ் மக்களின் விமோசனத்துக்கு வழிகாட்டும் தலைமை.

# கிறிஸ்நோனிஸ் விவகாரத்தை அரசியலாக்க முயற்சிக்க வேண்டாம்

## ஊடக அமைச்சர் கோரிக்கை



பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ் நோனிஸிற்கும் வெளி விவகார அமைச்சின் மேற்பார்வை எம்.பியான சஜின் வாஸ் குணவர்த்தனவிற்கும் இடையிலான மோதல் நிவ்யோக் நகரிலுள்ள தனிப்பட்ட வைபவம் ஒன்றிலேயே நிகழ்ந்துள்ளது.

இதனை சில ஊடகங்கள் அரசியல் மயமாக்க முயல்வது வருந்தத்தக்கது என மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ் நோனிஸினதும் வெளி விவகார அமைச்சின் மேற்பார்வை எம்.பியான சஜின் வாஸ் குணவர்த்தனாவினதும் முறுகல் நிலை குறித்து நேற்று முற்பகல் மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை தெரிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் பல கேள்விகளை எழுப்பினர்.

இதற்கு பதிலளிக்கும்போதே அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ் நோனிஸின் இராஜினாமா பற்றியும் இவர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதல் பற்றியும் நாடாளுமன்றத்திலும் விரிவான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

எனவே நானும் அது பற்றி மேலும் விபரிக்க வேண்டிய அவசியமில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது மாநாட்டின் போது இந்த இருவருக்கிடையில் மோதல் ஏற்பட்டிருந்தால் அது பற்றி பேசலாம். ஆனால் அப்படியான இடத் தில் இந்தப் பிரச்சினை ஏற்படவில்லை தனிப்பட்ட ஒரு வைபவத்தின் போது நிகழ்ந்த இந்த முறுகல் நிலையை ஊடகங்கள் அரசியல் மயமாக்க முயலவேணடாம் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

# பொன்சேகாவுடன் மனோ சந்திப்பு

## தயாராகிறது தேர்தல் வியூகம்



ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. ஜனநாயக கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில், மனோ கணேசனுடன் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்களான எஸ்.ராஜேந்திரன், சண். குகவரதன், பிரியாணி குணரத்ன ஆகியோரும் இடம் பெற்றனர். இந்தச் சந்திப்பின் போது, உத்தேச ஜனாதிபதி தேர்தல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப் பட்டுள்ளன.

பொது எதிரணியின் வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் போட்டியிடுவதையும், அதேவேளை இந்த பொது எதிரக கடசி கூட்டணி ஒரு பொது சின்னத்தில் களமிறங்க வேண்டும் என்பதையும் தான் வலியுறுத்தி வருவதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அத்துடன் கடந்த காலங்களை போல், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் மீதும், பொது எதிர்க்கட்சி கூட்டணியின் மீதும், புலி முத்திரை குத்தி இனவாத பிரசாரத்தை முன்னெடுக்க இந்த அரசுக்கு தான் இடமளிக்கப்போவதில்லை என்றும், இது தொடர்பான இறுதி நிலைப்பாட்டை உரிய வேளையில் அறிவிப்பதாகவும் சரத் பொன்சேகா கூறியுள்ளதாகவும், ஜனநாயக கட்சியும ஜனநாயக மக்கள் முன்னணியும், பொது எதிரணியில் காத்திரமான பங்கை கூட்டாக வகிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சப்ரகமுவ மாணவர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

சாத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் மீது, இனம் தெரியாத ஆயுத குழு மேற்கொண்ட தாக்குதலில் குறைந்தது 11 மாணவர்கள் படுகாயமடைந்துள்ளதாக, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மேலும் சத்தியாக்கிரக போராட்டத்துக்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களும் அடித்து உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புலிகளின் வலையமைப்புக்கு வடக்கிலிருந்து தகவல் வழங்குவது யார்?

## விசாரணைகள் ஆரம்பம்

வடக்கில் இருந்து புலிகளின் வலையமைப்புக்கு தகவல் வழங்குபவர்கள் யார் என்பது குறித்து பாதுகாப்புத் தரப்பு ஆராய்ந்து வருகிறது என்று சிரேஸ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அடிக்கடி வடக்கில் மறைந்துள்ள புலிகள் தகவல்களை வழங்கி வருகின்றனர்.

போர் முடிந்து விட்டது புலிகள் இல்லை என சிலர் குறிப்பிடுகின்றனர்.

அப்படி என்றால் படையினருக்கு எதிராக அறிக்கைகளை அனுப்பி வைப்பது பேய்களா?

புலிகளின் பிரசாரப் பணிகளுடன் தொடர்புடைய பலர் வடக்கில் இருக்கின்றார்கள்.

சந்தர்ப்பம் வரும் வரையில் காத்திருந்து தகவல்களை அனுப்பி வைக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மற்றும் மேற்குலக நாடுகளின் தூதரகங்கள் போன்றவற்றுக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

# ரணில் தான் ஜனாதிபதி வேட்பாளர் ஐ.தே.கட்சி இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் ஜனாதிபதி தேர்தல் கமிட்டியினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தேர்தல் கமிட்டி ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது என தீர்மானித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி தேர்தல் கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. இந்த கமிட்டியில் இருபது உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து நேற்று முன்தினம் சிறி கொத்தவில் வைத்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தேர்தல் கொள்கை, வேறு கட்சிகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. கட்சியின் ஏனைய உறுப்பினர்களிடம் தேர்தல் தொடர்பிலான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆஸி.உதவியுடன் புதிய நெடுஞ்சாலை

(கொழும்பு)

பேலியகொடவில் இருந்து கொழும்பு கோட்டை வரை புதிய வீதியொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் களனி கங்கை ஊடாக புதிய பாலம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

அவுஸ்ரேலிய நிறுவனம் ஒன்றுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை இணைந்து குறித்த பாலம் மற்றும் வீதியை அமைக்கவுள்ளது.

# சாதாரண மக்களின் கைகளுக்கு அபிவிருத்தி இன்னும் எட்டவில்லை

## ஐ.தே.கட்சி சாடல்



அபிவிருத்தியின் பயன்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எவ்வளவு அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டாலும் அது மக்களினால் உணரப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமுர்த்தித்திட்டம் தொடர்பில் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பணம் உள்ளவர்களின் பணம் அதிகரித்துள்ளது. வறியவர்களின் வறுமை மேலும் மேலும் அதிகரித்துள்ளது.

அபிவிருத்தியின் பலன்கள் அனைத்து மக்களையும் சென்றடையவில்லை.

அபிவிருத்தியின் பயன் மக்களினால் உணரக்கூடிய வகையில் இருக்க வேண்டியது அவசியமானது என ஹர்ஸ டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# தேசத்தை கூறுபோட அனுமதிக்க முடியாது



நாட்டை இரண்டாக பிரிப்பதற்கு புலம் பெயர்ந்த தமிழர்களுக்கோ வேறு எந்த சக்திகளுக்கோ இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

30 வருட யுத்தம் நிறைவடைந்த பின்னர் நாடு பாரிய அபிவிருத்தியைக் கண்டுள்ளது.

நாட்டை பிளவுபடுத்த தற்போது பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சக்திகளுக்கு தாம் ஒரு போதும் இடமளிப்பதில்லை என்று அவர் கூறியுள்ளார்.

நாரம்பல திவிநெகும பொதுச் சந்தையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மக்களிடம் கைகளித்தார். இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.


தம்ரோ
தீபாவளி சலுகை
சர்வதேச நம்பிக்கையை வென்ற தளபாடங்கள்
ரூபா. 73,400
மாதாந்தம் ரூபா. 2,040
Grace 3+2+1
Winchester Bed Suites
15%* கழிவு
Venus 3+1+1
ரூபா. 35,900
Rio Wardrobe
ரூபா. 14,900
75" x 36" Regent Bed
ரூபா. 13,900 இலிருந்து
Pearl Dining Suites
ரூபா. 25,650
KWU 016
ரூபா. 11,900
ரூபா. 9,900*
KSD 008
ரூபா. 9,575
KCT 035
ரூபா. 5,875
15%* கழிவு
ரூபா. 63,425
மாதாந்தம் ரூபா. 1,760
Nevada Dining Suites
KWU 011
15%* கழிவு
ரூபா. 31,175
ரூபா. 24,940*
KAV 067
ரூபா. 4,375
KWT 063
ரூபா. 7,665
OCT 032
ரூபா. 4,200 இலிருந்து
தம்ரோ சலவை இயந்திரங்கள்
காசு விற்பனைக்கு விசேட கழிவு
5 வருட உத்தரவாதம்
Fully Automatic
முழு மாதத்திற்கும் 4 அலகுகள் மின்சாரம் மாத்திரமே
MADE IN SRI LANKA
Semi Automatic
முழு மாதத்திற்கும் 2 அலகுகள் மின்சாரம் மாத்திரமே
ரூபா. 36,900
மாதாந்தம் ரூபா. 1,025
சந்தையிலுள்ள அநேகமான சலவை இயந்திரங்களில் 6kg இலிருந்து 7kg அளவு குறிப்பிடப்பட்டிருந்தாலும், சலவை செய்யக்கூடியது 4kg மாத்திரமே.
ரூபா. 22,900
மாதாந்தம் ரூபா. 635
INNOVEX
குறைந்த மின் பாவனையுடன் கூடிய குளிர்சாதனப்பெட்டி
சந்தை விலையை விட ரூபா. 10,000 குறைவாக
50mm தடிப்பமான வெப்பத்தை உட்செலுத்தாத சுவர்கள்
குளிரை தக்கவைத்துக்கொள்ளும்
வெளி வெப்பம் ஊடுருவுவதை தடுக்கும்
சுற்றாடலுக்கு பாதிப்பில்லாத R600a வாயு
100 % இயற்கையானது
ஓசோன் படலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாது
250 Litre
ரூபா. 54,900
பனி உறையாதது
10 வருட உத்தரவாதம்
MADE IN SRI LANKA
180 Litre
ரூபா. 39,900
180l Direct Cool
மாதத்திற்கு மின் அலகுகள் 12-18 இடையில்
இனோவெக்ஸ் LED TV
55" 3D
40"
32"
24"
19"
காசு விற்பனைக்கு விசேட கழிவு
3D SMART TV
சந்தை விலையை விட 50% குறைவாக
ரூபா. 19,900 இலிருந்து
இனோவெக்ஸ்
இணையற்ற உத்தரவாதத்துடன் சந்தையில் குறைந்த விலைக்கு
DVD Player
ரூபா. 4,790 இலிருந்து
Blender
ரூபா. 3,190
Bowl Mixer
ரூபா. 3,490
Vacuum Cleaners
Fans
Electric Kettles
ரூபா. 1,390 இலிருந்து
Hand Mixer
ரூபா. 2,490
Hair Dryers
ரூபா. 1,375 இலிருந்து
ரூபா. 7,775
மாதாந்தம் ரூபா. 215
Induction Cookers
ரூபா. 4,990 இலிருந்து
Steam / Dry Irons
ரூபா. 1,150 இலிருந்து
Sandwich Makers
ரூபா. 1,690 இலிருந்து
Pedestal Fan
ரூபா. 4,100 இலிருந்து
இந்த விசேட கொடுப்பனவு ஒக்டோபர் 22 ஆம் திகதி வரை மட்டுமே.
ஆரம்ப கட்டணமில்லாத 03 வருடங்களுக்கு வட்டியில்லாத இலகு கொடுப்பனவு முறைக்கு
www.damro.lk
நாடு முழுவதுமுள்ள தம்ரோ காட்சியறைகளிலிருந்து
077 2 857 857



# சீன மண்ணில் தொடரும் வெற்றிப்பயணம்

(ஷாங்காய்)

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியில் நடப்பு சம்பியன் ஜோகோவிச்சின் வெற்றிப்பயணம் தொடருகிறது.

ஷாங்காய் மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டி சீனாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும் உலகின் முதல் நிலை வீரருமான நோவக் ஜோகோவிச் (சேர்பியா) 6-4, 6-2 என்ற நேர்செட்டில் டேவிட் பெரரை (ஸ்பெயின்) தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார். சீன மண்ணில் ஜோகோவிச் தொடர்ந்து பெற்ற 29 ஆவது வெற்றி இதுவாகும்.

அரையிறுதியில் ஜோஜோவிச், சுவிஸ்சர்லாந்தின் ரோஜர் பெடரரை சந்திக்கிறார். இருவரும் இதுவரை 35 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளனர். இதில் பெடரர் 18 முறையும், ஜோகோவிச் 17 தடவையும் வெற்றி கண்டுள்ளனர். கடைசியாக விம்பிள்டன் இறுதிப் போட்டியில் ஜோகோவிச், பெடரரை வீழ்த்தியிருந்தார். அதற்கு பெடரர் பதிலடி கொடுப்பாரா? என்று இரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். முன்னதாக பெடரர் தன்னை எதிர்த்த ஜூலியன் பென்னட்டுவை (பிரான்ஸ்) 7-6 (7-4), 6-0 என்ற நேர் செட்டில் வெளியேற்றினார்.

அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறித்து பெடரர் குறிப்பிடுகையில், அரையிறுதியில் யாரை நான் எதிர்கொள்கின்றேன் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. யாராக இருந்தாலும் கள நிலைமைக்கு ஏற்ப செயற்பட்டு வெற்றிபெற முயற்சிப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

# தொடரை வென்றது ஆஸி



(டுபாய்)

பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒருநாள் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக் கொண்டது. பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஹமட் செஷாட் 61, சப்ராஸ் அஹமட் 65 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜோன்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 216 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 43. 2 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மைக்ஸ்வெல் 76, டேவிட் வோர்னர் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுல்பிகார் பாபர் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக மைக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலிய அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதி ஒரு நாள் போட்டி இன்றைய தினம் அபுதாபியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் அணியில் சகலதுறை வீரர் ஜேம்ஸ் பகல்னெர் இடம்பிடித்துள்ளார். எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ள இத்தொடருக்கான அவுஸ்ரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. அணியில் இடம்பிடித்த மிச்சேல் மார்ஷ் தொடையில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இதனால் சகலதுறை வீரர் ஜேம்ஸ் பல்க்னெர் கூடுதலாக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். டெஸ்ட் அணியில் இடம்பிடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என பல்கனெர் தெரிவித்துள்ளார்.

# ஸ்பெயின் அதிர்ச்சித்தோல்வி



(பாரிஸ்)

யூரோ கிண்ணக் கால்பந்து தொடருக்கான தகுதிச் சுற்றில், ஸ்பெயின் அணி சுலோவாக்கியாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டித் தொடருக்கு அடுத்து மிகப்பெரிய தொடர் யூரோ கோப்பை கால்பந்து. ஐரோப்பிய நாடுகள் மட்டும் பங்கேற்கும் இப்போட்டியின் 15ஆவது தொடர் பிரான்ஸில் வரும் 2016, யூன் 10 முதல் யூலை 10 வரை நடைபெறவுள்ளது. மொத்தம் 24 அணிகள் பங்கேற்கும் இத்தொடருக்கான போட்டியை நடாத்தும் நாடுஎன்ற அடிப்படையில் பிரான்ஸ் மட்டும் தகுதி பெற்றுள்ளது. மீதமுள்ள அணிகளுக்கு தகுதிச் சுற்று போட்டிகள் நடக்கின்றன. பரிசில் நடந்த சி பிரிவு லீக் போட்டியில் நடப்பு சம்பியன் ஸ்பெயின் அணி, சுலோவாக்கியாவை எதிர்கொண்டது. இதில், 2-1 என, ஸ்பெயின் அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது. கடந்த 2006இக்குப் பின், யூரோ கோப்பை கால்பந்து தொடர் தகுதிச் சுற்றில் ஸ்பெயின் தோற்றது இது தான் முதன் முறை.

இதையடுத்து, இத்தொடரில் ஸ்பெயின் அணி தொடர்ச்சியாக 36 போட்டிகளில் பெற்று வந்த வெற்றி நடை முடிவுக்கு வந்தது.

தோல்வி குறித்து, ஸ்பெயின் பயிற்சியாளர் டெல் போஸ்கே கூறுகையில், இந்த முடிவை எதிர்பார்க்கவில்லை. அதிக கோல்கள் அடித்திருக்க வேண்டும் ஆனால், அவர்கள் பின்களம் வலுவாக இருந்தது. அவர்களது கோல்காப்பாளரும் அபாரமாக கோல்களைத் தடுத்தார் என்றார்.

# இணைய வாய்ப்பில்லை


(லண்டன்)

முன்னணி கால்பந்து வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, மீண்டும் மென்செஸ்ட்ரர் யுனைட்டட் கழகத்தில் இணைந்து கொள்ளமாட்டார் என ரியல் மட்ரிட் கழகத்தின் முகவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

ரொனால்டோ கடந்த 2009ஆம் ஆண்டு மென்செஸ்ட்ரர் யுனைட்டட் கழகத்தில் இருந்து 80 மில்லியன் பவுண் பெறுமதியான உடன்படிக்கையின் அடிப்படையில் ரியல் மட்ரிட் கழகத்தில் இணைந்துக் கொண்டார்.

தற்போது மீண்டும் அவர் மென்செஸ்ட்ரர் யுனைட்டட் உடன் இணைந்து கொள்ளவிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

எனினும் ரொனால்டோவிடம் அவ்வாறான திட்டம் எதுவும் இல்லை என்று மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.



# சோதனைக்காலம்

(கொழும்பு)

பந்தை எறிவதாக சர்வதேச கிரிக்கெட் சபையினால் தடை விதிக்கப்பட்ட இலங்கை சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனாநாயக்க தனது பந்து வீச்சு முறையில் மாற்றங்கள் செய்து இலங்கையின் வர்த்தக கிரிக்கெட் தொடரில் விளையாடினார். கடந்த யூலையில் தடைக்கு உள்ளான சேனாநாயக்க முதல்முறை மூன்று போட்டிகளில் விளையாடி முறையே விக்கெட் இன்றி 35 ஓட்டங்கள், 2 விக்கெட்டுக்கு 22 ஓட்டங்கள் மற்றும் 3 விக்கெட்டுக்கு 16 ஓட்டங்கள் என்ற பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

மேற்கு அவுஸ்ரேலிய பல்கலைக்கழக நிபுணர்களின் ஆலோசனையுடன் தனது பந்துவீச்சு முறையில் மாற்றம் செய்யப்பட்ட நிலையில் ஐ.சி.சி. யின் வழிகாட்டலுக்கு அமையவே இந்தப் போட்டித் தொடரில் விளையாட சேனாநாயக்கவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் தனது பந்துவீச்சு முறை குறித்து இலங்கை கிரிக்கெட்டின் சுழற்பந்து பயிற்சியாளர் பியல் விஜேதுங்க தலைமையில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இந்தப் போட்டிகளில் அவரது பந்துவீச்சு குறித்து நாம் தீவிரமாக அவதானித்து வருகிறோம். அது குறித்த வீடியோக்களையும் கண்காணித்து வருகிறோம். இதன்மூலம் மேலும் சீர்செய்ய வேண்டிய தேவை குறித்து நாம் அவதானித்து வருகிறோம் என்று இலங்கை கிரிக்கெட் பயிற்சிக் குழுவின் தலைவர் ஜரோம் ஜெயரத்தன குறிப்பிட்டார். சசித்தரவின் பந்து வீச்சு முறை குறித்து நாம் திருப்தி கண்டால் நாம் அவரை ஐ.சி.சியிடம் மீள் பரிசோதனைக்கு அனுப்புவோம் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் வர்த்தக ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஏ நிலை போட்டித் தொடராக கருதப்படாதபோதும் உள்ளூர் போட்டிகளில் அது முக்கியமானதாகும். எனினும் சேனாநாயக்கவின் பந்துவீச்சு இன்னும் ஐ.சி.சியினால் அனுமதிக்கப்படவில்லை. இதற்கு அவரது பந்துவீச்சு முறை மீண்டும் ஒருமுறை ஐ.சி.சி. சோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். அதில் தேர்ச்சி பெற்றால் இலங்கை அணியில் மீண்டும் இடம்பிடிக்க முடியும்.

# தொடக்கம் தான் எனக்குப்பொருத்தம்



(மும்பை)

துடுப்பாட்ட தொடக்க வீரராக களமிறங்குவதே எனக்குப்பொருத்தமானது. இந்த இடத்துக்கு கடும் போட்டி நிலவுவது நல்ல விடயம் தான் என இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா தெரிவித்தார்.


ஆரம்ப வீரராக களமிறங்குவது என்பது எப்போதுமே சவாலானது. எனக்கு இந்தப் பணி கொடுக்கப்பட்டவுடன், சவாலாக எடுத்துக் கொண்டு திறமையை வெளிப்படுத்தினேன். இதனால், சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் உட்பட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றோம். தென்னாபிரிக்க தொடர் சிறியது (3 ஒருநாள் போட்டி) என்பதால், மீண்டு வர நேரமில்லை.

மாறாக, நியூசிலாந்து தொடரில், சிறப்பாகச் செயற்பட்ட போதும், தோல்வியடைந்தது ஏமாற்றம் தந்தது. இங்கிலாந்து தொடரில் மீண்டு வந்த நிலையில், காயத்தால் பாதியில் திரும்ப நேரிட்டது. விரலில் ஏற்பட்ட இந்தக் காயம் 80 சதவீதம் சரியாகிவிட்டது. தற்போதைய மறுவாழ்வு சிகிச்சையின் கடைசிக் கட்டத்தில் உள்ளேன். துடுப்பு பிடித்து பயிற்சியில் ஈடுபட ஆரம்பித்துள்ளேன்.

காயமடைந்த இந்த இடைப்பட்ட காலத்தில், இந்திய அணி விளையாடிய போட்டிகளை வீட்டில் இருந்து பார்த்தேன். இது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில், மைதானத்தில் விளையாடுவதை விட்டுவிட்டு, இப்படி உட்கார்ந்து பார்ப்பது கடினம். ஆரம்ப வீரர் இடம் தான் [illegible]க்கு பொருத்தமானது. தற்போது அணியின் ஆரம்ப வீரராக ரகானே [illegible] செயற்படுகிறார். இதையடுத்து, இந்த இடத்துக்கு கடும் போட்டி [illegible]றபட்டுள்ளது. இதனால், வீரர்கள் சிறப்பான முறையில் திறமையை வெளிப்படுத்த முயற்சிப்பர். இது கிரிக்கெட்டுக்கு மட்டுமன்றி, இந்திய அணிக்கும் நல்லது தான். தனிப்பட்ட முறையில் இது குறித்தெல்லாம் எதுவும் நினைக்கவில்லை. என்னைப்பொறுத்தவரையில் முதலில் உடற்தகுதி பெற்று, அணியில் இடம்பிடிக்க வேண்டும் அவ்வளவு தான் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹொக்கி கிண்ணம்; தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வசம்





(தெல்லிப்பளை)

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடாத்திய அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கமும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் விளையாட்டு அவையும் இணைந்து நடாத்திய ஹொக்கி தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15 வயதுப் பிரிவு ஆண், பெண்கள் அணிகள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் விளையாட்டு அதிகாரிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள், இரு கல்லூரி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (93)



# முள்ளியவளை வித்தியா சம்பியன்

(முள்ளியவளை)

ஹஜ் பெருநாளை முன்னிட்டு முல்லைத்தீவு நீராவிப்பிட்டி முள்ளியவளை அல்ஜின்னா விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரில் முள்ளியவளை வித்தியா அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாமுலை டைமய்ன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் முள்ளியவளை வித்தியா மற்றும் வளர்மதி அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வித்தியா அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய வளர்மதி அணி பத்து ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. 42 ஓட்டங்களால் வெற்றிபெற்ற வித்தியா அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

# தவறுக்கு வருந்தும் காலம் வரும்

(லண்டன்)

கெவின் பீற்றர்சனை ஐ.பி.எல். ருவென்ரி-20 போட்டித் தொடர் பாழாக்கிவிட்டது என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் நாசர் உசைன் தெரிவித்துள்ளார்.

பயிற்சியாளர் ஆன்டி பிளவர், வீரர்கள் மற்றும் பீற்றர்சனை நல்ல முறையில் தான் நடாத்தினார். ஆனால் பீற்றர்சன் ஐ.பி.எல். போட்டிக்கு பின் மாறிவிட்டார். அணியை விட ஐ.பி.எல். போட்டி பெரியது என்று நினைத்து விட்டார். மேலும் ஐ.பி.எல் போட்டியில் தான் அதிக பணம் சம்பாதிப்பதால் மற்ற வீரர்கள் தன் மீது பொறமைப்படுகிறார்கள் என்று நினைத்திருந்தார். அணியை விட தான் பெரியவன் என்ற நினைப்பு வந்துவிட்டது.

இது தான் அணியில் பிரச்சினையை ஏற்படுத்திவிட்டது. அணியில் உள்ள எல்லோருடனும் அவர் சகஜமாக இல்லை. என்றாவது ஒருநாள் பீற்றர்சன் தனது தவறுக்கு வருந்தலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# மன்னார் முசலி மென்பந்து புத்தளம் அணி சம்பியன்



(மன்னார்)

மன்னார் முசலி பிரதேசத்தில் நடைபெற்ற ஹனைஸ் பாரூக் எம்.பீ.சவால் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் சம்பியன் பட்டத்தை புத்தளம் ட்ராகன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

இந்த மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரானது வியாழக்கிழமை மன்னார் முசலி பிரதேச மைதானத்தில் நடைபெற்றது.

மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் நகரங்களிலிருந்து 48 அணிகள் இத்தொடரில் பங்கேற்றன.

8 ஓவர் கொண்டதாக நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் புத்தளம் ட்ராகன்ஸ் அணியும் அகத்தி முறிப்பு நியூ ஜின்னாஹ் அணியும் மோதின. இதில் புத்தளம் ட்ராகன்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இப்போட்டி நிகழ்வில் அனைத்து மாவட்ட அணிகளும் பங்குகொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தோம். அதே போன்று யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்ட அணிகளும் இத்தொடரில் பங்குபற்றியமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இதுபோன்ற சுற்றுப் போட்டியை எதிர்காலத்தில் நடாத்துவோம் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# துறையூர் ஐயனார் ஆண்டு நிறைவுக் கால்பந்து கிண்ணம் வென்றது புங்குடுதீவு நசரத்



(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை புங்குடுதீவு நசரத் அணி கைப்பற்றிக் கொண்டது.

தீவக கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வேலணை துறையூர் ஐயனார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் மற்றும் சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்துத் தொடர் நடாத்தப்பட்டது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு நசரத் அணியும் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணியும் மோதின. இதில் புங்குடுதீவு நசரத் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும், தம்பாட்டி காந்திஜி அணியும் மோதின. இதில் தம்பாட்டி காந்திஜி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி அணியும் புங்குடுதீவு நசரத் அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. பிற்பதி ஆட்டத்தில் எழுச்சிபெற்ற புங்குடுதீவு நசரத் அணி எதிரணியை திகைப்படையச் செய்யும் வகையில் அதிரடியானதொரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதன் பின்னர் இரு அணிகளும் கோலைப் பெற்றுக்கொள்ள பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதி வரை இரு அணிகளாலும் மேலதிகமாக கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் புங்குடுதீவு நசரத் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தார். (21)

# தம்பாட்டி காந்திஜி சுவீகரித்தது கிண்ணம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை தம்பாட்டி காந்திஜி அணி கைப்பற்றிக் கொண்டது.

அணிக்கு 10 ஓவர்களைக் கொண்ட இச்சுற்றுப் போட்டித் தொடர் கடந்த வாரம் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் தம்பாட்டி காந்திஜி அணியும் நெடுந்தீவு அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தம்பாட்டி காந்திஜி அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நெடுந்தீவு அணி 10 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. 10 ஓட்டங்களால் வெற்றி பெற்ற காந்திஜி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. துடுப்பாட்டத்தில் 34 ஓட்டங்களும், பந்துவீச்சில் இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு துணைபுரிந்த காந்திஜி அணியின் லிஜா போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார். (48)



# கூட்டமைப்பில் உள்ள கட்சிகளிடையே கூர்மையான பிளவு தோன்றியுள்ளது

- கே.ரி.இராஜசிங்கம் கட்டுரையிலிருந்து.

02.10.2014 நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் மத்தியில் கூர்மையான பிளவு தோன்றியுள்ளது வெளிப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்களில் ஒரு பிரிவினர், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னாள் தமிழ் ஆயுதக்குழுக்களோடு உள்ள கூட்டை தாங்கள் விலக்கிக் கொள்ள விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்கள், அதனால் அந்தக் கூட்டம் எதுவித தீர்மானமும் மேற்கொள்ளாமல் முடிவடைந்தது.


கூட்டம் யாழ்ப்பாணம், சோமசுந்தரம் வீதியில் உள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. முன்னர் இந்தக் கூட்டத்தை யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

ரி.என்.ஏ யின் அலுவலகத்தில் வசதிகள் இல்லாததால் கூட்டம் வடமாகாணசபை முதலமைச்சரின் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டது.

முதலமைச்சரின் அலுவலகத்துக்கும் மற்றும் அதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளுக்கும் வட மாகாணசபை மாதாந்தம் மூன்று இலட்சம் ரூபாய்களைச் செலுத்துகிறது, அதனால் அதை அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்துவது ஒரு கண்டிக்கத் தக்க செயல் என்பதை இங்கு நினைவுகூர வேண்டும்.

ரி.என்.ஏ யின் கூட்டத்துக்கு ஆர்.சம்பந்தன் தலைமை தாங்கினார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாண குடாநாட்டு வருகையின்போது ரி.என்.ஏ யின் நடவடிக்கைகளைப் பற்றி முடிவு செய்வதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. அத்துடன் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் நிதியை பயன்படுத்தி எப்படி அபிவிருத்திகளைச் செய்யலாம் என்பது பற்றித் தீர்மானிக்க ஒரு குழுவை அமைப்பது, வட மாகாணசபையின் செயற்படாமை பற்றி ஆராய்வது, போன்ற விடயங்களும் தீர்மானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது.

கூட்டத்தில் பங்குபற்றிய அநேகர், வடமாகாணசபை பதவிக்கு வந்து, இதுவரை ஒரு வருடம் கடந்து விட்டது, மற்றும் மாகாணத்தில் எந்த உருப்படியான அபிவிருத்தி செயற்பாடுகளையும் நடப்பாக்க உறுதியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை என்று குற்றம் சாட்டினார்கள்.




சில நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் வடமாகாணசபை முதலமைச்சரின் செயலற்ற தன்மை மற்றும் மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அவரது இயலாத் தன்மை என்பனவற்றைப் பற்றி குற்றம் சுமத்தினார்கள்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது உணர்ச்சி வசமான பதிலுரையில், முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் அங்கத்தவர்கள் மத்தியில் தன்னை அடையாளம் காட்டிக் கொள்வது தனக்கு மகிழ்ச்சியை தரவில்லை என்றும் அதனால் தான் தான் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

முதலமைச்சரின் இந்த அறிவிப்பு கடும் விமர்சனம், கண்டனம், எச்சரிக்கை என்பனவற்றை எழுப்பியதோடு, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், தமிழரசுக் கட்சி, விக்னேஸ்வரனை வட மாகாணசபைத் தேர்தல்களில் பொது வேட்பாளராக முன்மொழிந்தபோது, தான் பொது வேட்பாளராக வர வேண்டுமானால் ரி.என்.ஏயில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து அழைக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் வலியுறுத்தியதை நினைவு கூர்ந்தார்.

மற்றொருவர், தேர்தல் பிரசாரங்களின்போது விக்னேஸ்வரன், எல்.ரீ.ரீ.ஈ தலைவர் வேபிரபாகரனை மாபெரும் தமிழ் வீரன் என புகழ்ந்தவர், இப்போது அவர் முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைவர்களுடன் கூட்டுச் சேர தயாரில்லை என்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்டார். விக்னேஸ்வரனின் இரட்டை நாக்கு கூட்டத்தின் கவனத்தை ஈர்த்ததுடன் கண்டிக்கவும் பட்டது.

நீண்ட நேரமாக பதட்டம் நிலவியது. கூட்டம் மணிக் கணக்காக இழுபட்டு - வழக்கம்போல ரி.என்.ஏ.யின் இதர அங்கத்துவ கட்சிகள் தமிழரசுக் கட்சி பற்றி அவமதிப்புகளை பரிமாறுவதும் அதன் ஆதிக்க வெறியை திட்டித் தீர்ப்பதும் நடந்தேறியது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னாள் தமிழ் ஆயுதக் குழு அங்கத்தவர்கள், சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருப்தி அடையவில்லை, அவர்கள் திரும்பவும் தனியாக கல்வியங்காட்டில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனது வீட்டில் சந்தித்தார்கள்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியற் கட்சியாக பதிவு செய்வதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானித்தார்கள்.

ரி.என்.ஏ.யினை கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை தயாரிப்பது என்றும், ரி.என்.ஏயினை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வது தொடர்பான தீர்மானத்தை, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் கையளிப்பது என்றும் அங்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

மேலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி ரி.என்.ஏ யினை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக இல்லாவிட்டால், பின்னர் முன்னாள் ஆயுதக் குழுக்களின் தலைவர்கள், வரப்போகும் அடுத்த நாடாளுமன்ற தேர்தல்களில் வேட்பாளராக நியமனம் பெறுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கருணையை எதிர்பாராமல் தனியாகச் சென்று ஜனவரி 2015இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கே.வி. மகாதேவன்



## ௭

- பி.ஜி.எஸ்.மணியன் -

என்னதான் சிறப்பாக மகாதேவன் செயல்பட்டாலும் அவர் இசை அமைத்த படங்கள் எதுவுமே அதுவரை குறிப்பிடத் தக்க அளவில் வெற்றியைப் பெற வில்லை. அந்த குறையைப் போக்கி வெற்றிப் பாதையில் அவரை ஏற்றிக்கொண்டு போக வந்தது "டவுன் பஸ்."

ஒரு திரைப்படம் வெற்றிப்படமாக அமைய வேண்டுமானால் அதற்கு பல காரணிகள் தேவை. தெளிவான கதை, தேர்ந்த நட்சத்திரங்கள், சிறப்பான இசை, ஒளிப்பதிவு, அருமையான இயக்கம்.... என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவற்றில் ஏதாவது ஒன்றின் காரணமாக படம் தோல்வி அடைந்துவிட்டால் சிறப்பான அம்சங்கள் கூட எடுபடாமல் போய்விடக்கூடும்.

எல்லாமே சிறப்பாக இருக்கும் படங்கள் கூட சில சமயங்களில் தோல்வி அடைந்து விடுவதும் உண்டு.

உழைப்பும், அதிர்ஷ்டமும் ஒரே நேர்க்கோட்டில் பயணிக்க வேண்டும்.

மகாதேவனது திரை உலகப் பிரவேசத்தின் ஆரம்ப காலம் முதல் பத்து வருடங்கள் தனது திறமை அனைத்தையும் காட்டி இசை அமைத்தும் படங்கள் எதுவுமே சொல்லிக்கொள்ளும் அளவுக்கு வெற்றியைப் பெறவில்லை.

அப்போது இசைச் சக்ரவர்த்தி ஜி. ராமநாதன், எஸ்.வி. வெங்கட்ராமன், சி.ஆர். சுப்பராமன் என்ற மும்மூர்த்திகள் முதல் தலைமுறை இசை அமைப்பாளர்களாக இருந்தார்கள்.

இரண்டாவது தலைமுறையில் கே.வி. மகாதேவன் வந்தபோது தொடர் வெற்றிகளால் தயாரிப்பாளர்களை தங்கள் பக்கம் பல இசை அமைப்பாளர்கள் இழுத்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக குலேபகாவலியின் வெற்றி இரட்டையர்களான விஸ்வநாதன்-ராமமூர்த்தியின் பக்கம் அனைவரையும் திரும்பிப் பார்க்கவைத்தது. நாம் இருவர் தொடங்கி பராசக்தி வரை தொடர் வெற்றிகளின் காரணமாக ஆர். சுதர்சனம் முன்னேறி வந்துகொண்டிருந்தார். ஏற்கனவே எஸ்.எம். சுப்பையா நாயுடு வேறு ஒரு பக்கம் வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்தார். டி.ஜி. லிங்கப்பா, டி.ஆர். பாப்பா போன்ற புதிய தலைமுறையினர் வேறு களத்தில் இறங்கி கவனத்தை ஈர்க்க ஆரம்பித்திருந்தார்கள்.

இப்படிப்பட்ட சூழலில் எப்படிப்பட்டவருக்கும் ஒரு பரபரப்பு தொற்றிக்கொள்வது சகஜம்.

"டவுன் பஸ்" படம் 1955 இல் வெளிவந்தது. கண்ணப்பா - அஞ்சலிதேவி ஜோடியாக நடித்திருந்தனர். கதை வசனம் ஏ.பி. நாகராஜன். கே. சோமு இயக்கத்தில் வெளிவந்த இந்தப் படம் ஒரு சூப்பர் ஹிட் படமாக அமைந்தது.

அனைவரின் கவனத்தையும் கவர்ந்த படமாக "டவுன் பஸ்" அமைந்தது என்றால் அதற்கு காரணம் ஏ.பி.என் அவர்களின் கதை வசனமும், கே.வி. மகாதேவனின் இசை அமைப்பும் தான்.

"இடைவேளைக்குப் பிறகு முன்கூட்டியே யூகிக்கக் கூடிய திருப்பங்களுடன் சென்ற படத்தைக் காப்பாற்றும் அம்சமாக அமைந்தது கே.வி. மகாதேவனின் இசையமைப்பில் இடம் பெற்ற இனிமையான பாடல்கள்தான்" என்று தனது விமர்சனத்தில் குறிப்பிடுகிறார் பிரபல திரை ஆய்வாளர் ராண்டார்கை.




கா.மு. ஷெரீப் இயற்றிய பாடல் வரிகளுக்கு இசை அமைத்து கேட்பவர் காதுகளில் தேனை வார்த்தார் கே.வி. மகாதேவன்.

"குழந்தைப் பாடகி" என்றே பெயர் வாங்கி இருந்த எம்.எஸ். ராஜேஸ்வரியை கதாநாயகி அஞ்சலிதேவிக்காகப் பாடவைத்தார்.


"சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா.
என்னை விட்டுப் பிரிஞ்சு போன கணவன் வீடு திரும்பலே." - மழலைக் குரலில் ராஜேஸ்வரி சிட்டுக்குருவிக்குச் சொல்லும் சேதி கேட்கக் கேட்கத் திகட்டவே இல்லையே.

படத்தில் இரண்டு முறை இடம் பெறும் பாடல் இது.

அடுத்து திருச்சி லோகநாதனும், எம்.எஸ். ராஜேஸ்வரி, ராதா ஜெயலக்ஷ்மி ஆகியோர் பாடிய இன்னொரு ஹிட் பாடல் "பொன்னான வாழ்வு மண்ணாகிப்போமா துயரம் நிலைதானா உலகம் இதுதானா" - இன்று வரை கேட்பவர் நெஞ்சங்களை விட்டு நீங்காத பாடலாக அமைந்த பாடல் இது.

(தொடரும்)

இலங்கையை ஆண்ட இராவணேசுவரன் சைவ சமய ஆசிரியர்களாலே தேவாரத்திற் புகழ்ந்து பாடப்பெற்ற புண்ணியன். கயிலாய மலையைத் தன் இருபது தோள்களினால் தூக்கிய பேராற்றல் படைத்தவன். அவனுக்கு சிவபெருமான் முக்கோடி வாழ்நாளை அருளியதாகச் சொல்லப்படுகிறது. அதனால் அவன் தேவாரத்தில் "முக்கோடி வாழ்நாளது உடையானை" என்று புகழப் பெறுகிறான். முக்கோடி என்பது மூன்று கோடி; அது வாழ்நாளை உணர்த்துகின்றமையால் "மூன்று கோடி ஆண்டுகள் அவன் வாழ்ந்தான்" என்று கருதுகின்றனர். இக்கருத்து தவறு என்பது ஆராய்ச்சி அறிஞர் முடிவு. இதன் உண்மை என்னவென்று பார்க்கலாம்:-



# நடிகை பெயரில் கற்கைநெறி!

நடிகை பாரதிக்கு தற்போது வயது 68. 50 வருடங்களாக தொடர்ந்து நடித்து வருகிறார்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் திகதி பிறந்ததால் இவருக்கு பாரத நாட்டினை நினைவுபடுத்தும் வகையில் பாரதி என பெயர் சூட்டப்பட்டது.

1963 ஆம் ஆண்டு, சாந்தாராம். தயாரித்து இயக்கிய "கீத் கயா பாத்ரோனே" படத்தில் அறிமுகமானார். இந்தப் படத்தில் அறிமுகமான மற்றொரு பிரபலம் ஜீதேந்திரா.

1966இல் கன்னடத்தில் LOVE IN BANGALORE என்ற படத்தில் நடித்தார்.

1975 இல் கன்னட படவுலகின் பிரபல நடிகர் விஷ்ணுவர்த்தனை திருமணம் செய்து கொண்டார்.

இப்போது இவர் பெயரில் சினிமா தயாரிப்பு (FLIM MAKING) பற்றி கற்கைநெறி தொடங்கப்பட்டுள்ளது. இதனை கிரிஸ்ட் பல்கலைக் கழகத்தின் media studies இலாகாவும், ஏஷியாய Charitable Trust நிறுவனமும் இணைந்து நடத்துகின்றன. சினிமா தயாரிப்பு பயிற்சி, குறும் படங்கள் தயாரிப்பு குறித்து பாடம் நடத்துகிறார்கள். ஒரு நடிகை பெயரில் கற்கைநெறி என்ற முதல் பெருமையைப் பெறுகிறார் பாரதி.

# முக்கோடி வாழ்நாள்!



கோடி என்பது புதுமை. புத்தாடை அணிவதை கோடி உடுத்துதல் என்பர். ஒருவன் அல்லது ஒருத்தி தன் வாழ்நாளில் துணையை அடைந்து திருமணம் செய்து கொள்வது முதற் புதுமை. அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் மறுமுறை திருநாண்பூட்டி இரண்டாவது புதுமையைக் காண்கிறார்கள். இதனைச் "சட்டி அப்தப் பூர்த்தி" என்று கூறுகின்றனர். மூன்றாவது கோடி (அதாவது புதுமை) நூறாண்டு நிறைந்து கணவன் மனைவி வாழ்க்கை தொடங்கும்போது நிகழ்கின்றது.

இங்ஙனமாக ஒவ்வொருவருக்கும் வாழ்நாளில் மூன்று கோடிகள் நிகழ்தல் கூடும். அதனால் முக்கோடி வாழ்நாள் என்பது ஒருவன் "முழுமையும் வாழ்ந்த வாழ்நாள்" என்று பொருள்படும். இராவணேசுவரன் முக்கோடி வாழ்நாளும் வாழ்ந்தான். "நிரம்பிய வாழ்நாள் பெற்று நீடூழி வாழ்க" என இவனைச் சிவபெருமான் வாழ்த்தினார் என்பதே முக்கோடி வாழ்நாள் அருளினான் என்பதன் உண்மை!

- டாக்டர் இ.மு.சுப்பிரமணிய பிள்ளை

# ஒரு காதல் கடிதம்...



யாதுமான என் கோதே, என் கண்கள் இப்போது குளமாக இருக்கின்றன. செத்துவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது. இந்த சந்தோஷத்தை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை கோதே. இந்த நாள் இத்தனை அழகாய் இருந் திருக்க வேண்டாம். நமது எல்லா நாட்களும் அநேகமாக இப்படியே இருக்கின்றன. இந்த சந்தோஷம் என்னைத் திணறடிக் கிறது. நான் கொஞ்சம் மூச்சுவிட்டுக் கொள்ள வேண்டும்.

இந்தப் பரவசத்தை எப்படி எழுது வேன்? சந்தோஷம் என்ற வார்த் தையின் அர்த்தம் இப்போது தான் புரிகிறது. எது சந்தோஷம்? நம்மை நான்கு பேர் காதலிக்கிறார்கள் என்பதா சந்தோஷம்? இல்லை. நம்மால் ஒருத்தர் மீது பைத்தி யமாய் இருக்க முடிகிறது என்பது தானே சந்தோ'ம்? என்னால் உன் மீது பைத்தியமாய் இருக்க முடிகி றது. உன் உடம்பின் மீது என்னால் காமமில்லாமல் பைத்தியமாய் இருக்க முடிகிறது. உன் விரல்கள், அதன் நுனிகள், உன் மணிக்கட்டு, அந்த மருதாணி, அதன் வாசம் என உன் அனைத்தின் மீதும் என்னால் பைத்தியமாக இருக்க முடிகிறது கோதே.

உலகத்திலேயே அதி அற்புதமான விஷயம் என்ன தெரியுமா? madness உடன் இருக்க முடிவதும், அந்த madnessஐ எப்போதுமே தொலைக் காமல் வைத்துக் கொள்வதும் தான். அதே மாதிரி இன்னொரு அற்புதமான விஷயம் "பிரக்ஞை"யோடு இருத்தல். இது இரண்டும் ஒரே சமயத்தில் நிகழும் மகோன் னத அற்புதத்துக்குப் பேர் தான் காதல். காதலின் இந்த conscious madness ஐ உன்னிடம் தான் உணர்கிறேன் கோதே, இப்போது.

ஒரு இசையைப் போல, ஒரு புகழைப் போல, ஒரு நல்ல மதுவைப் போல உன்னை நினைப்பது என்பது போதையாய் இருக்கிறது. சமயங்களில் உன்னுடன் இருத்தலை விட உன்னை நினைத்துக் கொண்டிருப்பதே இன்னும் சந்தோஷமாக இருக்கிறது. இதைப் படிக்கும் போது நீ சிரிக்கிறாயா, இல்லை முறைக்கிறாயா?

உன்னைப் பார்க்கக் கிளம்புதல் என்பது இருக்கிறதே, அது விளக்க முடியாத ஒரு ecstasy. உன்னைப் பார்த்தல், உன்னுடன் இருத்தல் என்பது ஒரு மகாஅற்புதம். பிறகு உன்னை நினைத்துக் கொண்டே வீடு அடைதல் என்பது கொண்டாட்டமான ஒரு பேரவஸ்தை. அவஸ்தை எப்படிக் கொண்டாட்டமாக இருக்கும்?

ஒருவேளை, அடுத்த ஜென்மத்தில் நீ ஒரு ஆணாகப் பிறந்து, உன்னைப் போன்ற ஒரு காதலியைச் சந்தித்துவிட்டு வீடு திரும்பினால் உனக்குப் புரியக் கூடும். அந்தக் கொண்டாட்டமான அவஸ்தையை எப்படியாவது எழுதிவிடத் துடிப்பது இருக்கிறதே, அது ஒரு மகா களிப்பு. அந்த மகா களிப்போடு இதை எழுதிக் கொண்டிருக்கிறேன் இல்லையா, இப்போது நான் உணர்வதற்கு என்ன பேர் என்று தெரியவில்லை.

சொல்ல முடியாத சந்தோஷத் துக்கும், அதை சொல்லத் துடிக்கும் சிருஷ்டிகரமான மனநிலைக்கும், அதைச் சொல்லித் தீர்க்க முடியாத மொழிப் போதாமைக்கும் நடுவில் சிக்கிச் சாகும் இந்த நிமிஷ என் உணர்வுக்கு என்ன பேர் என்று தெரியவில்லை. ஆனால் இதெல்லாம் உன்னால் தான் கோதே! உன் காதல் உந்துகிற சிருஷ்டியால் தான் இப்படி பைத்தியமாக இருக்கிறேன். இப்படிப் பைத்தியமாய் இருப்ப தால் தான் உன்னைக் காதலித்துக் கொண்டே இருக்கிறேன். இந்த உலகத்தின் மிக ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்மகன் நான்தான் கோதே.

ஆனால், "உன் மீது நான் என்ன மாதிரிப் பைத்தியமாய் இருக்கிறேன், இது எனக்கு எவ்வளவு சந்தோஷத்தைத் தருகிறது" உள்ளிட்ட நுண்ணிய விவரணைகளை என்னால் பதிவு செய்யவே முடியவில்லை.

ஆனால் அதே சமயம், உன்னையும், "இந்தக்" காதலையும், "இந்த" சந்தோஷத்தையும் "மொழி கொண்டு எல்லாம் எழுதிட" முடியும் என்றும் எனக்குத் தோன்றவில்லை.

ஆனால் இப்போது சில விஷயங் கள் புரிந்து கொள்ள முடிகிறது. "பூ இடைபடினும் யாண்டுக் கழிந்தது அன்ன நீருறை மகன்றில் புணர்ச்சி" என்ற தமிழை இப்போது புரிந்து கொள்ள முடிகிறது. "ஜோடியாக நீந்திக் கொண்டி ருக்கும் மகன்றில் பறவைகளின் பாதையில் ஒரு பூ இடைப் பட்டதால், அவை சில நொடிகள் பிரிய நேர்கிறது. அப்படிப் பிரியும் போது அந்தப் பறவைகளுக்கு எப்படி இருந்திருக்கும்" என இப்போது புரிகிறது கோதே. அந்த சில நொடிகள் எப்படி ஒரு வருஷம் போல் அவற்றுக்குத் தோன்றின? என்பதும், அந்தப் பறவைகளைப் போலத் தானும் தலைவனைப் பிரிந்து வாடி இருப்பதாக சொல்லும் தலைவி எப்படி உணர்ந்திருப்பாள் என்பதும் புரிகிறது. தலைவனைக் காணுறால் அவள் அவனை எப்படி அணைத்துக் கொள்வாள் என்பதையும், இந்தச் செய்யுளினை யாத்தபோது சிறைக் குடி ஆந்தையாரின் மனநிலையையும் என்னால் உணர்ந்தறிய முடிகிறது. அப்புறம் நான் வேறு எதற்கு எதைத் தனியாக எழுத வேண்டும்?

இப்போதைக்கு இந்த சந்தோஷ மான நாளுக்கு நன்றி. இந்த சந்தோஷமான வாழ்க்கைக்கு நன்றி. இவ்வளவு காதலைப் புரிகிற முனையில் நான் இருப் பது பெரிதன்று, அதை வாங்கிக் கொள்ள முடிகிற இடத்தில் நீ இருப் பதற்கு நன்றி. ஏனென்றால், உலகத்தி லேயே விலைமதிப்பற்ற விஷயம் என்னுடைய காதல் தான். ஆனால் அதை வாங்கக் கூடிய செல்வம் உன்னிடம் மட்டுமே இருக்கிறது கோதே. என்னைத் தொடர்ந்து உன் மேல் பைத்தியமாய் இருக்க உந்திக் கொண்டிருப்பதற்கு நன்றி.

இந்த நாளின் ஒவ்வொரு நிமிஷத்தையும் நான் ஒரு ஆயிரம் முறையாவது மறுபடியும் என் மனதுக்குள் வாழ்ந்து பார்த்துக் கொள்வேன். எப்போதும் போலவே.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது எனக்கும், வாசித்துக் கொண்டிருக்கும் போது உனக்கும் இருக்கிற சந்தோஷ மும், அன்பும், காதலும், நீயும் நானும் வாழ்ந்து கொண்டிருக்கிற அதே பூமியில் வாழ ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும் எல்லா உயிருக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொள்வோம், கோதே.

- சுந்தர் ஸ்ரீனிவாஸ் -

# சென்ட் போட்டும் நாறுகிறதா?



மக்கள் சென்ட் போடும்போது, கைகளின் அடியில் நிச்சயம் போட்டுக் கொள்வர். ஆனால் இப்படி போட்ட சென்ட் வாசனை சில மணிக்குப் பிறகு ஆரம்ப மணம் போய்விடுகிறது. இது ஏன் என ஆய்வு செய்தனர். நமது கைக்கு அடியில் 28 நாட்களுக்கு ஒரு முறை புது கலங்கள் உருவா-கிறதாம். அப்போது சமமாக உருவாகும் பற்றீரியாக்களில் நல்லது, கெட்டது என இரண்டும் உண்டாம். இந்த பக்றீரியா எண்ணிக்கையில் நல்லது கூடுதலாக இருந்தால் சென்ட் வாசனை தொடரும். மாறாக கெட்ட பக்றீரியா அதிகமாக இருந்தால் அது கெட்ட நாற்றத்தை ஏற்படுத்துகிறதாம்.




கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நீர்வேலி பல.நோ.கூட்டுறவு சங்கத்தலைவர் சுந்தரலிங்கம் மங்களவிளக்கேற்றுவதையும் காணலாம். (48)

# நவீன மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாணவர்கள் வழிநடாத்தப்படவேண்டும்

## சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

மாறிவரும் உலகில் நவீன மாற்றங்களுக்கேற்ப ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்ட முன்வர வேண்டும். போட்டி நிறைந்த உலகில் வேலை அனுபவத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாணவர்கள் வழிப்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரைநிகழ்த்திய நில அளவைத்திணைக்கள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் சு.சிவானந்தராஜா குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இவ்விழாவில் பிரதமவிருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

பொதுப்பரீட்சைகளில் தோல்வியைக்கண்டு துவண்டு விடக்கூடாது.

தோல்விதான் வெற்றியின் முதற்படி. க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் 2 புள்ளிகள் குறைவடைந்தமையால் எனக்கு பொறியியல் பீடத்திற்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அன்றைய தோல்வியே எனது வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது.

அன்று பொறியியல் பீடம் சென்றிருந்தால் நான் இன்று இந்தளவு உயர்ந்த பதவிக்கு வந்திருக்க முடியாது.

இன்று அரச உயர்பதவிகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒன்று இரண்டு தமிழர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். எதிர்காலத்தில் அதிகளவில் தமிழர் உயர் பதவிகளை அலங்கரிக்க வேண்டுமானால் மாணவர்களாகிய நீங்கள் நன்கு கற்கவேண்டும். இந்தப் பாடசாலையில் கல்வி கற்று நான் அடைந்த உயர் பதவியை நீங்களும் அடைய வேண்டும்.

நான் உயர் நிலை அடைவேன் என்ற தைரியமும், தன்னம்பிக்கையும் மாணவர் சிந்தனையில் இருக்கவேண்டும். இலக்கை அடையத்தயாராகி அந்த இலக்கை நோக்கி உழைபபோமாயின் நிச்சயம் வெற்றி பெறமுடியும் எனவும் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினரா கலந்து கொண்ட கோண்டாவில் இ.போ.ச. பொறியியல் பகுதி உதவி முகாமையாளர் தி.ஏகாம்பரநாதன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# போக்குவரத்து சேவையை விஸ்தரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையினால் துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் நன்மை கருதி திங்கள் காலை மற்றும் வெள்ளி மாலையில் நடாத்தப்படும் ஆசிரியர்களுக்கான இலவச போக்குவரத்து சேவை யோகபுரம் மகா வித்தியாலயம் வரை நடாத்தப்பட வேண்டும் என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த பஸ் மல்லாவிச் சந்தியுடன் திரும்புவதால் யோகபுரம் மகாவித்தியாலயத்திற்கு செல்லும் ஆசிரியர்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களின் நன்மை கருதி திங்கட்கிழமை காலை மற்றும் வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் இச்சேவையினை யோகபுரம் மகாவித்தியாலயம் வரை நடைபெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (66)

# முரசின் இன்றைய பலன்



(12.10.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 26 ஆம் திகதி.
சதுர்த்தி / சித்தம்.
கார்த்திகை நட்சத்திரம் மு.பகல். 08.27 வரை. பின் ரோகினி.
இராகு காலம 04.32 - 06.32 வரை. சுபநேரம 09.02 - 10.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சொத்துப்பிரச்சினை சுமுகமாகத்தீர பிதாவின் கருனை ஏற்படல், புதியன கொள்வனவிற்காக வெளியூரிலிருந்து பிள்ளைகள் பணம் அனுப்புதல். |
| ரிஷபம் | வெளியீட்டு விழாவினை நடாத்துவதற்கு நண்பர்சகிதம் முயற்சியில் ஈடுபடல், உதவி பெற்றவர் நட்டாற்றில் கைவிட்டதால் மனக்கிலேசமடைதல். |
| மிதுனம் | அடகுப் பொருளை மீட்பதற்கு பணம் பெற நண்பர் உதவுதல், முரண்பட்டிருந்த மாமன் உதவிசெய்ய முன்வரல். |
| கடகம் | பொய்யான வாக்குறுதியை நம்பி பொறுப்பின்றிக் கொடுத்த கடனைப்பெறமுடியாது திண்டாடுதல், பேதங்களைக் காட்டாது சகபாடிகளை அரவணைத்து காரியமாற்ற முயலுங்கள். |
| சிம்மம் | அச்ச உணர்வு ஏற்பட்டவேளை இறைவழிபாட்டில் மனதைச்செலுத்தல், சகஊழியருடன் இருந்துவந்த பகைமை உணர்வு விலகிவிடல். |
| கன்னி | புதிய தொழில் ஆரம்பிக்க நாள்கோள்நிலை அறிய ஜோதிடரை நாடுதல், அறிமுகமில்லாதவரின் உறவினை முளையிலேயே கிள்ளிவிடல். |
| துலாம் | உங்களுடைய பணியை பிறரிடம் ஒப்படைப்பதை இயன்ற வரை தவிருங்கள், இடமாற்றம் தற்காலிகமாக ஒத்திவைத்ததை அறிந்து புளகாங்கிதமடைதல். |
| விருச்சிகம் | தெரியாத்தனமாக செய்த குற்றத்தை எண்ணி மனத்துயர் மேலிடல், வாகனயோகங்கிட்டுவதற்கு சகோதரரிடமிருந்து பணிவரவை எதிர்பார்த்தல். |
| தனுசு | சிலநாட்களாக தம்பதியர் மத்தியில் நிலவியிருந்த மனக்கசப்பு நீங்கிவிடல், புதிய ஒப்பந்தத்தை ஏற்பதா, விடுவதா என்ற இரண்டுங்கெட்டான் நிலையில் இருத்தல். |
| மகரம் | விவாகம் தடைப்படுவதை கிரக சாந்தி மூலம் நிவர்த்திக்க வழிவகைகளை ஆராய்தல், கல்விப்புலத்தில் கூடிய கவனமெடுக்க பிள்ளைகளை வேண்டுதல் செய்தல். |
| கும்பம் | பிரயாணத்தின் போது தூக்கக்கலக்கத்தில் ஆவணங்கள் திருடப்படும் அபாயமுண்டு, அனுமதி கிடைப்பதற்கு உரியவர்களின் தயவினை நாடிச்செல்லுதல். |
| மீனம் | பங்காளருடன் ஏற்படும் மனத்தாங்கலினால் தனித்து செயற்பட முடிவெடுத்தல், எதிர்பார்த்த பணவரவு கிட்டாமையினால் சுப நிகழ்வினை ஒத்திவைத்தல். |

# அஞ்சல்சேவை அற்புதமானசேவை பிரதிதபால் மா அதிபர் தெரிவிப்பு

அஞ்சல் சேவையானது அரச மற்றும் தனியார் துறையினருக்குமான அற்புதமான சேவையை மேற்கொண்டுவருவதாக பிரதி தபால் மா அதிபர் சேனதீர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பரமேஸ்வரா வீதியில் அமைந்துள்ள ராஜாகிறீம்கவுஸ் மண்டபத்தில் நடைபெற்ற 140 ஆவது உலக அஞ்சல் தினநிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஞ்சல் திணைக்களத்தின் கடந்த பாதையை நாங்கள் திரும்பிப்பார்க்கவேண்டும் இந்தத் தபால் சேவை யானது அதன் ஒழுக்குவிதிகளின் படி எவ்வாறு வளர்சிபெற்றது. எவ்வாறு இந்த அமைப்புக்கள ஒன்றிணைக்கப்பட்டு ஒரு நாட்டிற்குள் இந்த சேவை எவ்வாறு மேம்படுத்தப்பட்டது. என்பதை நாம் அறியவேண்டும். இது ஒரு அத்தியாவதிய சேவை காலத்திற்குச் காலம் மாற்றங்களைக் கொண்டு வந்த இந்தசேவை அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைக்கின்ற அற்பு தமான சேவையை ஆற்றி வருகின்றது. அஞ்சல் திணைக்களம் இன்றி எந்தச் சேவையும் சுயாதீன மாக இயங்க முடியாது. உலகத்தை ஒரு ஒழுங்கிற்குள் கொண்டுவருவதற்கு இந்த அஞ்சல் சேவை அற்பணிப்புடன் செயலாற்றிவருதாக தெரிவித்த அவர் இலங்கை மக்களது இந்த தேசிய நிகழ்வு இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடப்படுவதற்கு ஏற்ப இந்த ஆண்டு வடக்கில் யாழ்ப்பாணத்தில் ஒழுங்குபடுத் தப்பட்டிருப்பதாக தெரிவித்தார். (பா)

# எழுத்தாளர் பத்மநாதன் கௌரவிப்பு



கொக்குவில் பொது நூலகத்தின் வாசிப்பு மாத சிறப்பு நிகழ்வாக மூத்த எழுத்தாளர் சோ.பத்மநாதன் கௌரவிக்கப்படவுள்ளார். கொக்குவில் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில இன்று மாலை 3 மணிக்கு நல்லூர் பிரதேசசபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை நூலகர் சத்திய மூர்த்தியும் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணனும் சிறப் புரையை ஓய்வுநிலைப்பேராசிரியர் எஸ்.சிவலிங் கராஜாவும் வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல் [illegible] கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி [illegible]ர் ச.லலீசன், ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத் தலைவர் பண்டி தர் கடம்பேசுவரன், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் கு.ஞானகாந்தன் ஆகியோரும் வழங்குவர். நிறைவுரையை கொக்குவில் பொது நூலகத்தின் நூலகர் கி.அனிதா நல்குவார்.

# ஆசிரியர் தின விழா

கைதடி யூப்பிட்டர் கல்வி நிலையத்தின் ஆசிரியர் தின விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணவத் தலைவன் சி.துஸ்யந்தன் தலைமையில் கைதடி கயிற்றசிட்டி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையா ளர் ச.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், அப்புத்தளை தொட்டுகல தமிழ்க்கலவன் வித்தியாலய அதிபர் வி.வரதராஜா,கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

# இருவாரங்களுக்குள் கருங்கல்லில் கட்டடத்திற்கு பெயர் பொறிக்கவேண்டும்

## உப.தவிசாளர் மகேந்திரன் வேண்டுகோள்

உள்ளூராட்சி மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேச சபைக்கான தலைமை அலுவலக இரு மாடிக் கட்டட திறப்பு விழா முடிவடைந்தும் கருங்கல்லினால் பெயர் பொறிக்கப்படவில்லை என பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டும் சபையின் தலைவர் செயலாளர் அமைதியாக உள்ளமை விசனம் தருகிறது.

இவ்வாறு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உபதவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் கவலை வெளியிட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக உப தவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மேம்படுத்தல் திடடத்தின் கீழ் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் திறப்பு விழா இடம் பெற்றது.

அவ்வேளையில் தவிசாளர் உறுப்பினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவும் முன்னாள் தவிசாளருக்கு போதிய ஒத்துழைப்பினை உறுப்பினர்கள் வழங்காத சூழலில் திறப்பு விழா இடம் பெறும் வேளையில் சபையின் உறுப்பினர்களின் பெயர் பொறிக்கப்படவில்லை.

எனவே சபை கலைவதற்கு இன்னமும் எட்டு மாதங்களே உள்ளன.

எனவே தவிசாளர் செயலாளர் உடன் எமது சபை உறுப்பினர்களது பெயர் விபரங்களை இரு வாரங்களுக்குள் கருங்கல்லில் பொறித்து பொருத்தமான இடத்தில் நிறுவவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# நவாலியில் விஷமிகள் தொல்லை தாங்க முடியாத துன்பம் மக்களுக்கு

நவாலி கட்டுடை இடிகுண்டுப் பகுதியில் விஷமிகளின் அட்டகாசத்தால் பயணிகள் போக்குவரத்து செய்வதில் பலத்த சிரமம் ஏற்பட்டுள்ளது. நவாலி இடிகுண்டுப் பகுதியில் வீதியின் நடுவே வெற்றுசாராய கண்ணாடிப்போத்தல்கள் உடைத்து போடப்பட்டுள்ளதால் அவ் வீதி வழியாக பயணிப்போர் மற்றும் வாகனங்களில் செல்வோர் பலத்த சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியும் குண்டும் குழியுமாக காணப்படுவதுடன் இடி குண்டைசுற்றிய மதிலோரம் பற்றைகள் மற்றும் கழிவுகள் நிரம்பிய சூழலாகவும் உள்ளது இவ்வாறு போக்கு வரத்திற்கு இடை யூறுகள் இருப்பதன் மத்தியிலும் மக்கள் போக்குவரத்து செய்யும் வேளை விசமிகளின் இச் செயலால் மக்கள் மேலும் பாதிக்கப்படுகின்றனர்.

தூரப்பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் பலரது துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள்கள் எண்பன உடைந்த கண்ணாடிகளால் குத்தப்பட்டு காற்றுப்போய் நீண்டதூரம் வாகனங்களை உருட்டிச் செல்லும் அவல நிலைக்கும் உள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?என பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (66)

# விழிப்புலனற்றோர் சங்கத்தின் வெள்ளைப்பிரம்பு தின விழா

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் 15ஆம் திகதி காலை 9 மணிக்கு கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி விழிப்புலனற்றோர் சங்க தலைவர் ச.ரூபராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி• மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வரோட் நிறுவனப் பணிப்பாளர் அருட் தந்தை அல்பிரட் அருள்ராஜ், தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தின் வட மாகாண தலைவர் கே.விஜயராசசிங்கம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் மு.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலயத்தின் விசேட கல்வி ஆலோசகர் திருமதி ரேணுகா ஜீவரட்ணம், குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தின் வட மாகாண இணைப்பாளர் வி.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். முதல் நிகழ்வாக காலை 9 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோவில் முண்பாக இருந்து கூட்டுறவு மண்டபம் வரையில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறவுள்ளது.(90)

# ஆட்டோ மோதித்தள்ளியது ஆலய பிரதம குரு-காலில் காயம்

## நவாலி வீதியில் சம்பவம்


வீதியின் அருகே நின்ற ஆலய பிரதமகுருவை பின்னால் வந்த ஆட்டோ மோதித் தள்ளியது. இதனால் நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலய பிரதம குருசிவத்திரு மா.பத்மநாதன் காலில் காயமடைந்தார்.

இச்சம்பவம் ஆனைகோட்டை நவாலி பிரதான வீதியில் சோமசுந்தரம் வீதி முகப்பில் இடம் பெற்றது.

வாகனங்கள் தொடர்ச்சியாக பிரதான வீதி வழியே வந்தமையால் துவிச்சக்கர வண்டியில் வந்த ஆலய பிரதம குரு வீதியின் ஓரத்தில் ஒதுங்கி நின்றுள்ளார்.

இவ்வேளையில் வேகக்கட்டுப்பாட்டை மீறி அதிவேகத்தில் வந்த ஆட்டோ வீதியின் ஓரத்தில் நின்ற ஆலய பிரதம குருவான சிவத் திரு மாரிமுத்து பத்மநாதனை தாக்கியுள்ளது.

இதனால் துவிச்சக்கர வண்டியுடன் சேர்ந்து அவர் விழுந்த போது காலில் காயமடைந்துள்ளார்.



கடந்த சில தினங்கள் பெய்த மழையினால் நெல்லியடி புதிய சந்தைக்கு செல்லும் பாதையில் வெள்ள நீர் தேங்கி நிற்பதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (18)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு நாட்டில் சர்வாதிகாரி ஒருவர், ஆட்சியில் இருந்த போது, நாட்டில் உணவுப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு துண்டு பாணுக்காக மக்கள் நீண்ட கியூவில் நிற்பதெல்லாம், அங்கு வெகு சகஜமான காட்சி.

அத்தகைய சூழ்நிலையில் ஒரு நாள், கியூவில் பாணுக்காக நின்றான் ஒரு கவிஞன். இரண்டு மணி நேரம் நின்றும் கியூ கொஞ்சம் கூட குறையவில்லை. மேலும் கியூ நீண்டு கொண்டே தான் இருந்தது. மனம் வெறுத்துப் போன கவிஞன், 'நம்முடைய உயிரே போனாலும் பரவாயில்லை; இந்தச் சர்வாதிகாரியைக் கொன்றுவிட வேண்டியது தான். குறைந்த பட்சம், இந்த நாட்டு மக்களாவது நன்றாக இருப்பர்!' என்று நினைத்து, கியூவில் தன் அருகில் நின்றவர்களிடம் தன் முடிவை அறிவித்து விட்டு, சர்வாதிகாரியின் அரண்மனையை நோக்கிப் போனான். என்ன ஆனதோ தெரியவில்லை; போனவன், வெகு சீக்கிரத்திலேயே திரும்பி விட்டான்.

பக்கத்தில் நின்றிருந்தவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்... 'என்ன அதற்குள்ளாகவா அந்த சுப காரியம் முடிந்து விட்டது?' என்று கேட்டனர். அதற்கு கவிஞன், 'அட, நீங்கள் வேற! அங்கே அந்த சர்வாதிகாரியைக் கொல்ல அரண்மனையில் இதைவிட பெரிய கியூ நின்று கொண்டிருக்கிறது...' என்றான்.

*** *** *** ***

அமெரிக்கர்கள் வணிக இலாபத்திற்காகக் காசு கொடுத்து எதையும் வாங்கி விடுவார்கள் என்பதைக் கேலி செய்யும் ஒரு கதை:

போப் ஆண்டவர் ஒரு நாள் தோட்டத்தில் நடைப் பயிற்சி செய்து கொண்டிருந்தார், அருகே தோட்டக்காரர் புற்களை வெட்டி அழகு செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ஒரு அமெரிக்கன் நீண்ட கோட், உயரத் தொப்பி சகிதம் வந்து போப் ஆண்டவர் முன் பணிவாக வணக்கம் சொல்லி ஏதோ கிசு கிசுத்தான். போப் ஆண்டவர் கடுப்பாகி, "நோ, நோ அதெல்லாம் முடியாது" என்றார். உடனே அந்த அமெரிக்கன் இன்னும் பணிவாக, "5 மில்லியன் டொலர்.." என்றான். "ஹூம்,... அதெல்லாம் முடியாது" என இன்னும் கடுமையாகச் சொன்னார் போப்.

"பத்து மில்லியன் டொலர்..." என இழுத்தான் அமெரிக்கன். "முடியாது... முடியாது" என இன்னும் கோபமாகச் சொன்னார் போப் ஆண்டவர். "சரி ஃபாதர் 10 பில்லியன் டொலர்" என்று அழுத்தமாகச் சொல்லி போப் ஆண்டவரின் முகத்தைப் பார்த்தான் அமெரிக்கன். போப் ஆண்டவர் கடுங்கோபமாகி "நோ, நோ கெட் அவுட்.." என்று கத்தியவுடன் அந்த அமெரிக்கன் ஓடிப்போனான்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த தோட்டக்காரர் போப் அருகில் சென்று, "சாமி, நீங்கள் இப்படிக் கோபப்பட்டு நான் பார்த்ததே இல்லையே, அந்த அமெரிக்கன் அப்படி என்ன சொன்னான்?"

போப் ஆண்டவர் கோபம் தணியாமல் சொன்னார்: "ஒன்றுமில்லை, நாம் 'சேர்ச்'சில ஜெபம் சொல்லி முடிச்சவுடன் 'ஆமென்' என்று சொல்கிறோம் இல்லையா, அதுக்குப் பதில் 'கொகோ கோலா' என்று சொல்லணுமாம்.."

*** *** *** ***

முல்லா நஸ்ருத்தீன் ஒருநாள் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். அவருடைய மனைவி என்ன விஷயம் என்று கேட்டாள். 'பக்கத்து வீட்டு அப்துல்லாவிடமிருந்து வாங்கிய கடனை நாளை திருப்பித் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டேன். ஆனால் பணம் இல்லை. அதனால்தான் உறக்கம் வரவில்லை' என்கிறார் முல்லா.

'அவ்வளவுதானே, விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டு வெளியே வந்த முல்லாவின் மனைவி, 'அப்துல்லா, அப்துல்லா' என்று ரோட்டில் நின்று கத்தினாள். அப்துல்லா தூக்கக் கலக்கத்துடன் கண்களைக் கசக்கிக்கொண்டே வெளியே வந்தார். அவரிடம் முல்லாவின் மனைவி, 'உங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனை நஸ்ருத்தீன் நாளை தரமாட்டார்' என்று சொல்லி விட்டு உள்ளே வந்துவிட்டாள்.

அறைக்குள் வந்தவள், தூக்கம் வராமல் கிடந்த நஸ்ருத்தீனிடம் 'இனிமேல் அப்துல்லாவுக்குத்தான் தூக்கம் வராது; நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்' என்றாள்.

## 2,009 போருக்கு பின்னர்
# 6.2 பில்லியன் டொலர் செலவில் சீனா முன்னெடுக்கும் நவீன உட்கட்டுமானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் போருக்கு பின்னர் நவீன வடிவில் பாரிய உட்கட்டுமான திட்டம் சீன அரசால் முன்னெடுக்கப்படும்.

இவ் உட்கட்டுமானம் ஏ.வி. ஐ.சி.சர்வதேச நிறுவனத்தினால் நான்கு மாடிகளைக் கொண்டதும் 602 ஆடம்பர விடுதிகளை கொண்டதாகவும் அமையும் என சின்குவா சீன செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் அமையவுள்ள கட்டட தொகுதிக்கு "அஸ்ரோரியா" என பெயரிடப்பட்டுள்ளது.

இவ் உட்கட்டுமானவிடயத்தில ஆடம்பர வாழ்க்கைத்தரத்தை உடையோர். உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களும் பங்கு கொண்டு வாழலாம்.

இவ்விடயம் தொடர்பில் இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிகர் வு-ஜியான்கோ கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இவ் உட்கட்டுமான அபிவிருத்தி திட்டம் எல்லோரும் எதிர்பார்த்த படி சீன அரசால் முன்னெடுக்கப்படும்.



30 வருட போருக்கு பின்னர் இலங்கை தீவில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்காகவும் ஏனைய வீதி, ரயில்போக்குவரத்து மற்றும் சர்வதேச விமான போக்குவரத்து உள்ளிட்ட அபிவிருத்திக்காக 1.2 பில்லியன் ரூபா உட்பட 6.2 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

மேற்படி அபிவிருத்தித்திட்டம் முன்னெடுப்பிற்காக 180 நாடுகளில் இருந்து 70 ஆயிரம் ஊழியர் ஈடுபடுத்தப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தபால் விநியோக பாதிப்பு இன்று முதல் சீரடையும் வாய்ப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த ரயில் சேவை பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் பரிமாற்றப்பட முடியாத நிலையில் உள்ளதாக நேற்றுமுன்தினம் தபால் திணைக்கள தொழிற்சங்கம் தெரிவித்திருந்தது.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் ரயில் சேவை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேநேரம் இரவு அனைத்து தபால் சேவை ரயில்களும், பதுளை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பளைக்கு அன்றையதினம் சென்றபோதிலும் மீளவும் திரும்பி வருவது தடைப்பட்டது.

இதனால் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையம் மற்றும் ஏனைய பகுதிகளில் தபால்கள் நிரம்பியிருந்தன.

எனவே இந்தக் கடிதங்களை உரியமுறையில் விநியோகிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தபால் சேவை தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

தினமுரசு

வலி.தென்.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட


### காக்கைதீவு நரகமாகிறது அரச அதிபர் நடவடிக்கை எடுப்பாரா?

வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட காக்கைதீவு பிரதேசம் நரக பிரதேசமாக மாறிவருகிறது. ஒரு பிரதேசம் அழகாகவும் துப்புரவாகவும் இருப்பதற்காக இன்னொரு பிரதேசம் நரகமாக மாறிவருகின்றது – மாற்றப்படுகின்றது.

காக்கைதீவு பிரதேசம் நவாலி ஆனைக்கோட்டை ஆகிய கிராம பிரதேசங்களை அருகில் கொண்டமைந்த இடங்களாகும்.

தினமும் யாழ்.நகர பகுதியில் இருந்தும் வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இருந்தும் வகை தொகையின்றி குப்பைகள் டிராக் டர்களில் கொண்டு செல்லப்பட்டு காக்கைதீவு கடற் கரையில் கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றன.

இதனால் வெளிவரும் புகைமூட்டத் தினால் நவாலி ஆனைக்கோட்டை கிராமங்களில் வாழும் மக்களுக்கு சுவாசம் சம்பந்தமான நோய்கள் தாக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



மேற்படி விடயம் தொடர்பில் நவாலி முருகானந்தா ச.ச. நிலைய தலைவர் 07.11.2013 இல் வடமாகாண விவசாய அமைச்சருக்கும், 18.10.2013 இல் யாழ்.அரச அதிபருக்கு முருகானந்தா சனசமூக நிர்வாகத்தினர் கடிதம் எழுதி யிருந்தனர்.

எனினும் கழிவுகள் கொட்டப்படுவதும், கழிவுகள் எரியூட்டப்படுவதும், மலக்கழிவுகள் பரவப்படுவதும் நாளாந்த வேலையாக விட்டது. இன்று பெரும்போக நெற்செய்கை செய்யமுடியாத அளவிற்கு காக்கைதீவு பிரதேசம் மாறிவிட்டது.

இதனை விட காக்கைதீவுக்கு அருகில் யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழான கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையும் பல மில்லியன் ரூபாவில் முன்னெடுக்க திட்டமிடப்படுகின்றது. எனவே இவ்விடயத்தில் அக்கறையுள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் அரசாங்க அதிபரும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே எதிர்காலத்தில் வலி.தென்மேற்கு பிர[illegible]சத்தில் உள்ள நவாலி ஆனைக்கோட்டை மக்களை சுவாசம் மற்றும் நோய்களின் ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கலாம். உரிய நேரத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள் கிறோம்.

இரா.ரிஷாந்
நவாலி, மானிப்பாய்.

# "ஹட் ஹட்" சூறாவளி இலங்கைக்கும் பாதிப்பு

## காற்றுடன் கூடிய மழை பொழிய வாய்ப்பு

வங்காள விரிகுடாவில் மையங் கொண்டுள்ள "ஹட் "ஹட் (HUD HUD) என அழைக் கப்படும் சூறாவளிப் புயல் கார ணமாக இலங்கையின் பல பாகங்களிலும் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்யுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வானிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஹட் "ஹட் சூறாவளிப் புயலானது வடமேற்குத் திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

விசாகப் பட்டணத்திலிருந்து தென்கிழக்காக 610 கிலோமீற்றர் தூரத்திலும் கோபாலூரிலிருந்து தெற்கு - தென்கிழக்காக 630 கிலோமீற்றர் தூரத்திலும் இப் புயல் மையங்கொண்டுள்ளது.

இந்த சூறாவளிப்புயலானது தொடர்ந்தும் வடமேற்குத் திசையை நோக்கி நகர்ந்து, வலுவடைந்து சூறாவளிப் புயலாக மாறி அடுத்த 12 மணி நேரத்தில் மேலும் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் பின்னர் இச்சூறாவளியானது, வட ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டிணம் அருகே ஊடறுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூறாவளியினால் நேரடியான பாரிய தாக்கம் எதுவும் இலங்கையில் இல்லாதபோதும், இலங்கையிலும் தீவைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியங்களிலும் பலமான காற்று வீசலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களின் சில பகுதிகளிலும் காலி, மாத்தறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் காலை வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும்.

இது பின்னர் வடமேற்கு பிராந்தியத்திற்கும் பரவும்.

அத்துடன் ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பிற்பகல் அல்லது மாலை வேளைகளில் இடியுடன்[illegible]ய மழை காணப்படும்.

இந்நிலை காணப்படும் சந்தர்ப்பத்தில் காற்று பலமானதாக வீசும். புத்தளம் முதல் மன்னார் ஊடான காங்கேசன்துறை வரையான கடல் பிராந்தியம் மற்றும் காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றர் தொடக்கம் 60 கிலோமீற்றர் வரையான வேகத்தில் அதிகரித்து வீசுவதனால் இக்கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளுக்கு ஆதரவான போக்கு; பிரித்தானிய பிரதமர் மீது கண்டனம்


பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களால் வழங்கப்பட்ட ஒரு ஒப்பந்த வேலைக்கு அமைய செயற்படுவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

பிரித்தானிய பிரதமர் கமரூனின் புலம்பெயர் தமிழர்களுனான தொடர்புகள் கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது, அவரது செயற்பாடுகள் மூலம் தெளிவாக வெளிப்பட்டது என அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு வந்திருந்த கமரூன், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து கவலைகளை வெளியிட்டதுடன் சர்வதேச விசாரணைக்கு ஆதரவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைப் பெற முயற்சித்து வருவதுடன், அவர்களுடன் இரகசியமான சந்திப்புகளை நடாத்தியுள்ளார் என்றும் ரம்புக்வெல குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ரணில் விக்ரமசிங்கவுடனான இரகசிய சந்திப்புகளை புலம்பெயர் தமிழர்கள் ஏற்க மறுத்து விட்டதாக ஊடக தகவல்கள் தெரிவிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.







பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் ஆசிரியர் தினவிழாவிலே பாடசாலை அபிவிருத்திக் குழுத்தலைவர் எஸ்.கிருஸ்ணசிங்கம் தலைமையில் விருந்தினர்கள் அழைத்துச்செல்லப்படுவதையும் பிரதம விருந்தினரான கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சிவஸ்ரீ தேசியக்கொடியை ஏற்றி விழாவை ஆரம்பிப்பதையும் ஆசிரியர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் காணலாம்.

28. இலங்கை தேசிய கொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்பது
(1) செமஞ்சள் நிறப் பகுதி (2) செந்நிறப் பகுதி
(2) பச்சை நிறப் பகுதி (4) மஞ்சள் நிறப் பகுதி

29. இலங்கை அரசாங்க இலச்சினையில் உள்ள நிறைகுடத்தினால் குறிப்பிடப்படுவது
(1) வாக்கியம் (2) தன்னிறைவு (3) தார்மீகம் (4) நிலைத்திருத்தல்


30. கலாவாவியைக் கட்டுவித்த அரசன்
(1) பண்டுகாபயன் (2) தாதுசேனன்
(2) மகாசேனன் (4) மகாபராக்கிரமபாகு

31.


உருவில் காணப்படுவது
(1) யாப்பகூவாக் கோட்டை
(2) சிவனொளிபாதமலை
(3) சிகிரியா
(4) தலதாமாளிகை

32. டை பயன்படுத்தப்படுவது
தச்சன் வேலைத்தலத்தில் (2) கொல்லன் கம்மாலையில்
வயலில் (4) சுரங்கத்தில்


33. வரும் எந்த ஒழுங்கமைப்பில் இரும்பாணியை நோக்கிக் குண்டூசி கூடுதலாக இழுக்கப்படும்?


(1) (2) (3) (4)


34. பின்வரும் உபகரணங்களில் குளிர்பானப் போத்தலைத் திறக்கப் பயன்படுத்தப்படுவது யாது?


(1) (2) (3) (4)

35. மின்குமிழை ஒளிரச் செய்வதற்காக A, B என்னும் இரு ஆணிகளையும் தொடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வேண்டியது
(1) வாணிசுத் தாள் (2) ஈயத் தாள்
(3) திமைத் தாள் (4) ரிகுத் தாள்




36. உருவில் காணப்படுகின்றவாறு ஒளிரும் மெழுகுவர்த்திகள் நான்கினை வேறுபட்ட உயரங்களைக் கொண்ட நான்கு கண்ணாடிப் பாத்திரங்களினால் ஒரே தடவையில் மூடும்போது




முதலில் அணையும் மெழுகுவர்த்தி யாது?
(1) A (2) B (3) C (4) D

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு

1. பின்வரும் பாடல்களை வாசிக்க

எண்ணிய முடிதல் வேண்டும்;
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்;
தெளிந்த நல்லறிவு வேண்டும்;

பண்ணிய பாவ மெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்

சுப்பிரமணிய பாரதியார்

- மேற்குறித்த இரு பாடல்களையும் பயன்படுத்தி (i) தொடக்கம் (vi) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பாரதியார் இங்கு யாரிடம் வேண்டுதல் செய்கின்றார்? ..............................

(ii) இங்கு 'சூரியன்' என்ற கருத்தைத் தரும் பெயர்ச்சொல்லை எழுதுக. ..............................

(iii) 'நினைத்தல' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக. ..............................

(iv) 'புண்ணியம்' என்ற சொல்லுக்குரிய எதிர்ச சொல்லைத் தெரிவு செய்து எழுதுக. ..............................

(v) 'பாவம்' என்பதற்கு உவமானமாகக கூறப்படும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக. ..............................

(vi) பாரதியாரின் வேண்டுதல்கள் இரண்டினை எழுதுக.
(அ) ..............................
(ஆ) ..............................

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் √ அடையாளத்தையும் பிழையாயின் × அடையாளத்தையும் எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது இடுக.
(i) எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளது. ..............
(ii) மான் கூட்டம் சிறுசி ஓடியது ..............
(iii) ஒவ்வொரு புத்தகமும் நல்லது. ..............
(iv) தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை ..............

3. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
(i) (1) முயர்ச்சி (2) முயச்சி (3) முயற்சி (4) முயற்ச்சி
(ii) (1) தொழிலாழி (2) தொளிலாளி (3) தொழிலாளி (4) தொளிலாழி

4. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
(i) கண் வளர்தல் ..............................
(ii) கைகொடுத்தல் ..............................

5. சேவல், மைனா என்ற இரு சொற்களிலும் சே, மை என்னும் எழுத்துக்களில் இடப்பட்டுள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
(i) 'ே' (ஒற்றைக் கொம்பு - இரட்டைக்கொம்பு - சங்கிலிக்கொம்பு) : ..............
(ii) 'ை' (ஒற்றைக்கொம்பு - இரட்டைக் கொம்பு - சங்கிலிக்கொம்பு) : ..............

06. படத்தைப் பார்த்து அவை ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பெயரை ஆங்கிலத்திலேயே எழுதுக.

(i)  ................................ (ii)  ................................

07. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் எழுதுக.
நான் எனது நாட்டை நேசிக்கிறேன். ................................

08. கருத்தைத் தமிழில் எழுதுக.
(i) who is shouting? ................................
(ii) silence please! ................................
(iii) Let's sing a song ................................

09. (i) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
பிறந்தநின வாழ்த்துக்கள். ................................

(ii) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
(அ) அபே பந்திய
(ஆ) குருத்துமா எனவாத?

**10 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

10. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்
(1) கொன்றை (2) முள்முருக்கு (3) அலரி (4) ஆவரசு

11. நீர்வாழ் தாவரம்
(1) சீதேவியார் செங்கழுநீர் (2) ஊதுபூ
(2) பன்னம் (4) ஐதரில்லா

12. மாம்பழம், வேங்கை, தேங்காய் என்னும் வித்து வகைகள் பரம்பல் அடைவது முறையே
(1) காற்றின் மூலம், நீரின் மூலம், விலங்குகளின் மூலம்
(2) காற்றின் மூலம், விலங்குகளின் மூலம், நீரின் மூலம்
(3) நீரின் மூலம், காற்றின் மூலம், விலங்குகளின் மூலம்
(4) விலங்குகளின் மூலம், காற்றின் மூலம், நீரின் மூலம்

13. தாவர இலைகளைப் பயன்படுத்திக் கூடுகளைச் செய்வது
(1) கொக்கு (2) காகம் (3) முசிறு (4) அணில்

14. இலங்கைக்கேயுரிய விலங்கினம்
(1) நீலப்புள் (2) மயில் (3) கிளி (4) காகம்

15. உருவில் காணப்படும் பறவையின் பெயர் யாது?

(1) மீன்கொத்தி
(2) குக்குறுவான்
(3) கானாங்கோழி
(4) கிளி

16. வத்தாளைக் கிழங்கில் அதிக அளவில் உள்ள போசணைப் பொருள்
(1) புரதம் (2) மாப்பொருள் (3) விற்றமின் (4) இலிப்பிட்டு



17. மணலின் கீழ் வைப்பதன் மூலம் நெடுங்காலத்திற்குப் பேணத்தக்க உணவு வகைகளுக்கு உதாரணம்
(1) எலுமிச்சம்பழம், மீன் (2) மாம்பழம், கிழங்கு
(3) வெங்காயம், ஈரப்பலா (4) எலுமிச்சம்பழம், பலாக்கொட்டை

18. கிளைத் துண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க பயிர்வகை
(1) மிளகாய் (2) பயறு (3) கங்குன் (4) உருளைக்கிழங்கு

19. வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.
(1) மண்வெட்டி, முள்ளு, தூக்குத்குண்டு (2) துருத்தி, கலப்பை, குப்பைவாரி
(3) சீவுளி, மண்வெட்டி, சுத்தியல் (4) மண்வெட்டி, முள்ளு, குப்பைவாரி

20. இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?

(1) வட்டமாகச் செல்லல் என்பதாகும்
(2) மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதாகும்
(3) வலமாகத் திரும்ப வேண்டும் என்பதாகும்
(4) கவனமாகக் கையாள வேண்டும் என்பதாகும்.

21. கொள்ளை நோய் பரவுவது
(1) நுளம்பின் மூலம் (2) எலியின் மூலம் (3) ஈயின் மூலம் (4) கோழியின் மூலம்

22. டெங்கு நோய் தொடர்பான பின்வரும் கூற்றுக்களிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) எந்த நுளம்பினாலும் டெங்கு நோய் பரப்பப்படலாம்
(2) டெங்கு நோய் பரவுதலைத் தடுக்கலாம்
(3) டெங்கு நோயைக் குணப்படுத்தலாம்
(4) டெங்கு நோய் காரணமாக இறப்பும் ஏற்படலாம்

23. அசுத்தமான நீரைக் குடிக்கும்போது பீடிக்கத்தக்க நோய்
(1) மலேரியா (2) சயரோகம் (3) எலிக்காய்ச்சல் (4) மஞ்சட்காமாலை

24. பின்வரும் கூற்றுக்களிடையே நீரைப் பற்றிய பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) நீருக்கு நிச்சயமான வடிவம் இல்லை
(2) வெப்பமாக்கும்போது நீர் நீராவியாக மாறுகின்றது
(3) வெப்பநிலை அதிகரிக்கும்போது சீனி நீரில் கரைதல் கடினமாகும்
(4) கலக்கப்படும்போது சீனி நீரில் எளிதாகக் கரையும்

25. 
உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு பெயர் யாது?
(1) கலப்பை
(2) பெருங்கரடி
(3) வேட்டைக்காரன்
(4) தேள்

26. தேசப்படத்தில் புகையிரதப் பாதைகள் காட்டப்படும் நியம நிறம்
(1) மஞ்சள் (2) நீலம் (3) கறுப்பு (4) கபிலம்

27. இழக்கப்பட்ட அடையாள அட்டை பற்றி அறிவித்தல், சைக்கிளுக்கான உத்தரவுச் சீட்டைப் பெறுதல், வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதியைப் பெறுதல் என்னும் அலுவல்களுக்காகச் செல்ல வேண்டிய இடங்கள் முறையே
(1) பிரதேசச் செயலகம், பொலிஸ், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்
(2) பொலிஸ், பிரதேசச் செயலகம், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்
(3) மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம், பிரதேசச் செயலகம், பொலிஸ்
(4) பொலிஸ், மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம், பிரதேசச் செயலகம்

# அபிவிருத்தியின் அறுவடையை அனுபவிக்க தடைபோடுவது ஏன்

## சமாதானத்துக்கான யாழ்ப்பாண சங்கம் கேள்விக்கணை

கடந்த மூன்றுகால தசாப்த காலமாக இலங்கையில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் காரணமாக ஏனைய இனங்களை விடவும் அதிக இழப்புக்கள் ஏற்பட்டது தமிழ் மக்களுக்கே என்பது அனைவரும் அறிந்த உண்மை.

இந்த யுத்தத்தின் காரணமாக தமிழ் இனத்தின் பெறுமதிமிக்க உயிர்கள் அழிக்கபபட்டன. பலா அங்கவீனாகள் ஆக்கப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள இழக்கப்பட்டன. தமிழர்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டது.

பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் சேதமாக்கபட்டு கல்வித்துறையில் முன்னிலையில் இருந்த தமிழ் இனத்தின் கல்வி நடவடிக்கைகள் பாரியளவில் பின் தள்ளப்பட்டன. காலம் காலமாக பாதுகாக்கப்பட்ட தமிழர் கலாசாரம் சிதைக்கப்பட்டது. இதன் காரணமாக இன்றும் கூட இலங்கைத் தமிழர்கள் பல நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும் தற்போது யுத்தம் முடிவடைந்து சமாதானம் ஏற்பட்டு தமிழ் மக்கள் ஓரளவு அமைதியாக வாழ ஆரம்பித்துள்ளனர். தேவையற்ற நடைமுறைகளுக்குப் பொருத்தமற்ற மக்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய வாதங்களைத் தவிர்த்து யுத்தத்தால் பல்வேறு வழிகளிலும் அழிவுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ மக்களின் கல்வி, பொருளாதார, விவசாயத்துறைகளை மேம்படுத்த துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதே தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகளால் எமது மக்களுக்கு இன்று செய்ய வேண்டிய முக்கிய கடமையாகக் காணப்படுகின்றது.

இன்று வடக்கு கிழக்குத் தமிழர் பகுதிகளில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்களை யார் செய்கிறார்கள்? எந்த நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறது என்பது எமக்கு முக்கியமல்ல.

அதன் மூலம் முழுமையான பயனை எமது தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நாம் முயற்சி செய்வதே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நாம் செய்யும் முக்கியமானதும் இன்றியமையாததுமான பணியாகக் காணப்படுகின்றது.

அந்த அடிப்படையில் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இன்றும் நாளையம் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எனவே இந்த நிகழ்சித் திட்டங்களில் தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக கொண்டுள்ள கட்சி என்ற அடிப்படையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பு இதில் கலந்து கொள்வதே சிறந்தது. ஏனெனில் அப்போது தான் இத் திட்டங்களில் காணப்படுகின்ற குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி இவ் அபிவிருத்தித் திட்டங்களின் முழுமையான பயன்களைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும்.

அதைவிடுத்து தமது சுயநல அரசியல் காரணங்களுக்காக இதில் கலந்துகொள்ளாமல் அவைகளுக்கு தடையாக இருப்பது தமழ் மக்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்யும் மிகப் பெரிய துரோகமாகவே எதிர்காலத்தில் தமிழர்களால் பார்க்கப்படும்.

எனவே இது சம்பந்தமாக வடக்கு தமிழ் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு காலத்திற்கு ஏற்றவாறு சிறந்த தீர்மானம் மேற்கொள்வதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் செய்ய வேண்டிய சிறந்த் முடிவாகும்.



# வற்றாத பகை உணர்வு இன்னும் எதுவரை?

## இது ஒரு கிராம வாசியின் குரல்

வடக்கு அபிவிருத்தி திட்டங்களின் நன்மைகளை பொது மக்களுக்கு கையளிப்பதற்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 12, 13, 14 ஆம் திகதிகளில் கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்கிறார் இந்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகள் ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் கலந்து கொள்வார்களா இல்லையா என்பதே கடந்த சில நாட்களாக வடக்கு தமிழ் மக்களுடைய விடை காணமுடியாத பிரதான கேள்வியாக இருந்து வருகிறது.

வடக்குக்கு இம்முறை விஜயம் செய்யும் ஜனாதிபதி கிளிநொச்சி யிலும் யாழ்ப்பாணத்திலும் பொது மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை கையளிப்பதற்கு எதிர்பார்த்துள்ளார் இந்த நிலையில் மத்திய அரசினால் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கும் அனுபவிப்பதற்கும் பொது மக்கள் அரசியல் பிரச்சினைகளுக்கும் மத்தியில் எதிர்பார்த்து காத்திருக்கும் போது தமிழ் மக்களுடைய அரசியல் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியு கூட்டமைப்பினர் இந் நகழ்வுகளில் கலந்து கொள்வதா இல்லையா என்பதை தீர்மானிப்பதில் கட்சி மட்டத்தில் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியும் கூட முடிவு எடுக்க முடியாமல் தாங்கள் குழம்புவதுடன் மட்டுமில்லாமல் ஊடகங்கள் வாயிலாக மக்களையும் குழப்பி வருகின்றார்கள்.

இன்றைய நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வெறுமனே போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், சத்தியாகிரகங்கள் கவன ஈர்ப்பு என அரசுக்கெதிரான போராட்டங்களை நடத்துவதும் சர்வதேச பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதும் வடமாகாண சபைக்கு ஊடாக காகித தீர்மானங்களை இயற்றி பத்திரிகைகளில் பிரசித்தப்படுத்தி கொண்டிருப்பதுமான செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு மத்திய அரசிடம் இருந்து பெற்று கொடுக்கப்பட வேண்டிய மக்கள நலன் சார்ந்த அபிவிருத்தி நன்மைகள் மக்களுக்கான ஜீவனோபாய செயற்றிட்ட நன்மைகள், வேலைவாய்ப்புகள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், மக்களுக்கான பொது அத்தியவசிய சேவை களையும் மக்களுடைய அன்றாட இயல்பு வாழ்வுக்கான தடைகளையும் அகற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் ஜனாதிபதியுடனும் மத்திய அரசுடனும் பேரம் பேச வேண்டுமே ஒழிய மத்திய அரசினால் மேற்கொள்ளப் பட்டு மக்களிடம் மக்களுக்கான நன்மைகள் கையளிக்க முற்படும்போது அதில் பங்காளிகளாக இணைந்து கொள்வதை விடுத்து மத்திய அரசுடனும் ஜனாதிபதியுடனும் பகைமை பாராட்டக்கூடாது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைமையும் வடமாகாண அரசின் சில முக்கியஸ்தர்களும் அரசிடமும் ஜனாதிபதியுடனும் தத்தமது தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் நிவாரணங்களையும் சலுகைகளையும் வசதிகளையும் பெற்றுகொள்வதற்காக அரசுடனும் ஜனாதிபதியுடனும் கூடி குலவி விருந்துண்டு ஆறஅமர பேச முடியுமாக இருந்தால் ஏன் தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி சம்பந்தப்பட்ட விடயங்களில் அதே அரசுடனும் ஜனாதிபதியுடனும் இணைந்து செயற்பட முடியாமல் இருக்கிறது என்பதை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு வடமாகாண முதலமைச்சரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைமைத்துவமும் தயாரா?

# வலி.மேற்கில் பங்கேற்பு திட்டம் வலுவிழப்பு மக்கள் பிரதிநிதிகளும் பங்கேற்கவில்லை

## சுழிபுரம் வீரபத்திரர் ச.ச.நி-முதலமைச்சருக்கு மகஜர்

வலி. மேற்கு பிரதேச சபை மக்கள் பங்கேற்பு திட்டத்தைப் புறந்தள்ளியே செயற்படுத்தியுள்ளது. இதுஎம்மை புறந்தள்ளி செல்லுவதாகவே நாம் கருதுகிறோம். ஏனெனில் மக்கள் பிரதிநிதிகள் கூட பங்குகொள்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறு சுழிபுரம் கிழக்கு வீர பத்திரர் ச.ச.நிலை யத்தைச் சேர்ந்த 110 பேர் கையெழுத்திட்ட மகஜரை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் கைய எித்துள்ளனர்.

கிராம வீதிகள் புனரமைத்தல் - சுழிபுரம் கிழக்கு எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சத்தியக்காட்டு சந்தை வீதியானது எமது பிரதேசத்தில் 1.6 கிலோமிற்றர் நீளமுடைய வீதியாகும். இவ்வீதியினூடாக பண்ணாகம், சுழிபுரம் கிழக்கு, பனிப்புலம், வடலியடைப்பு, பல்லசுட்டி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்படி வீதியில் 10 கிராம சேவகர் பிரிவுக்குரிய பிரதான சந்தை அமைந்துள்ளது. உள்ளீடுகளை வாங்கவும், விற்கவும் மக்களும் விவசாயிகளும் இவ் வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இக்கிராமத்தில் பறாளாய் பகுதியில் சுமார் 500 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. அப்பகுதி விவசாயிகளும் இவ் வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதியினூடாக சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை, சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் முன்பள்ளி, சுழிபுரம் கிழக்கு ஆறுமுக வித்தியாசாலை போன்ற பாடசாலை களுக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் மிகுந்த சிரமத் துடன் பிரயாணத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ் வீதியால் சுழிபுரம் கிழக்கு பத்திர காளி அம்மன் கோவில், சுழிபுரம் வடக்கு சம்பு நாத ஈஸ்வரர் கோவில், கண்ணகை அம்மன் கோவில், வள்ளியம்மை கோவில், பறாளாய் ஈசுவர விநாயகர் கோவில், பறாளாய் சிவசுப்பிரமணியர் கோவில போன்ற வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் மக்களும் கஷ்டமான போக்குவரத்தை எதிர்கொள்கின்றனர்.

திட்டங்களை இனங்கண்டு மக்களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமிடல் கூட்டம் சுழிபுரம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் நடாத்தப்பட்டது.

இக் கூட்டத்தின் நோக்கம் மக்களின் பங்களிப்புடன் தொடர்புடையது என்று நாமும் மற்றும் இக்கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஏனைய பொது அமைப்புக்களும் கருதியமையினால் பொது அமைப்பின் சார்பில் 2 பிரதிநிதிகள் வீதம் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் தான வாக்கெடுப்பு முறையில் தெரிவு இடம்பெற்றமை தெரியவந்துள்ளது. இதனால் எங்கள் கிராமத்தைச் சார்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாக இருந்தமையினால் வாக்கெடுப்பு தெரிவு முன்னுரிமை அடிப்படையில் தலைகீழாக மாற்றப்பட்டு விட்டது.

கடந்த மூன்று வருடங்களாக பிரதேச சபை தவிசாளரை சந்தித்து கலந்துரையாடல் நடாத்தி கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டபோதும் இவ்வீதியை புனரமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டபோதும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

இதனால் எம்மைப் பறம் தள்ளுவ தாகவே நாம் கருதுகின்றோம். எமது பகுதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மககள் பிரதிநிதியும் கூட்டங்களில் கலந்துகொள்ள ஏற்பாடாகி இருக்கவில்லை.

சபை நிதி குறித்து ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதி, வடக்கு கிழக்கு மக்கள் பங்களிப்புடனான மேம்பாட்டுத் திட்டம், உள்ளூராட்சி சபைகளுககான மேம்பாட்டுத் திட்டம்போன்ற நிதி ஏற்பாடுகள் இருந்தபோதும் இதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. எமது கிராமத்தில் கடந்த நாற்பது வருடங்களாக கீழ்வரும வீதிகள் புனரமைக் கப்படாமல் உள்ளன என்பதையும் தங்களின மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

பெயர் :ம.மதீஸ்
முகவரி: 11/2 விவசாயக் கந்தோர் லேன், யாழ்ப்பாணம்.



அகவை 2 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........
முகவரி :- ..........
பிறந்த ஆண்டு :- ..........
கூப்பன் ஐந்தும் புகைப்படமும்

..........
பெற்றோர் கையொப்பம்

# உலகை அச்சுறுத்தும் எபோலா

# பலி எண்ணிக்கை 4033 ஆக உயர்வு

## உலக சுகாதார நிறுவனம் தகவல்

(ஜெனீவா)

எபோலா நோயினால் பலியானோர் எண்ணிக்கை 4,033 ஆக உயர்ந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளான லைபீரியா, நைஜீரியா, கினியா, சியாரா லோன் ஆகிய 4 நாடுகளில் எபோலா என்ற கொடிய வைரஸ் நோய் பரவியுள்ளது. மேலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தவிர செனேகல், ஸ்பெயின், அமெரிக்கா உளளிட்ட நாடுகளிலும் எபோலா நோய் தாக்கியுள்ளது.

உயிர்க்கொல்லி நோயான இதைக் குணப்படுத்த மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் லைபீரியாவில் தான் எபோலா நோய்த் தாக்கம் அதிகம் உள்ளது. அங்கு பாதிக்கப்பட்டிருந்த 4076 பேரில் 2,316 பேர் பலியாகி உள்ளனர். சியாரா லோனில் பாதிக்கப்பட்ட 2,950 பேரில் 930 பேர் இறந்துள்ளனர்.

கினியாவில் பாதிக்கப்பட்ட 1350 பேரில் 416 பேர் உயிரிழந்துள்ளனர். பலியானவர்களில் 233 சுகாதார பணியாளர்களும் அடங்குவர். நைஜீரியாவில் 20 பேர் எபோலா நோயினால் பாதிகப்பட்டுள்ளனர். அவர்களில் 8 பேரும், அமெரிக்கா மற்றும் ஸ்பெயினில் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.காங்கோ நாட்டில் எபோலாவால் பாதிக்கப்பட்டுள்ள 71 பேரில் 43 பேர் பலியாகியுள்ளனர். செனேகலில் ஒருவர் இறந்துள்ளார்.

# பின்நோக்கிய பாதங்கள் சீன பெண்ணிடம் அபூர்வம்

(பீஜிங்)




உலகம் முழுவதும், விசித்திரமான உருவ அமைப்புகளுடன் குழந்தைகள் பிறப்பது வழக்கம். அவ்வாறு பிறக்கும் பல குழந்தைகள், பிறந்த சில நாட்களிலேயே இறந்து விடும். ஒரு சில குழந்தைகள் மட்டும் தாம், வளர்ந்து பெரியவர்களாகி, மற்றவர்களை அதிசயப்படுத்துகின்றனர்.

அந்த வகையில், சீனாவின் சோங்கிங் பகுதியை சேர்ந்த, வாங் பாங் என்ற பெண், பார்ப்பதற்கு சாதாரண பெண்ணாக காட்சியளித்தாலும், வித்தியாசமான கால்களைக் கொண்டுள்ளார். அனைவருக்கும் உள்ளது போல இல்லாமல், இவரின் பாதங்கள் பின்நோக்கி அமைந்துள்ளன. இத்தகைய பாதங்களால் சரிவர நடக்க முடியாது என்று டாக்டர்கள் கூறினாலும், தன்னால் நன்றாக நடக்க முடிவதாகவும், ஓட்டப் பந்தயத்தில், தன் தோழிகளை பின்னுக்கு தள்ளியுள்ளதாகவும் வாங் பாங் கூறியுள்ளார். இவர் அணியும் செருப்புகள், முன்னோக்கி இல்லாமல், உடலுக்கு பின்புறம் நீட்டிக் கொண்டிருக்கும்.

பிறவிக் குறைபாடு உள்ளவர்களுக்கு, அந்நாட்டு அரசு வழங்கும் பெனஷன் தொகையை வாங்க மறுத்த இந்தப் பெண், சோங்கிங் பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் பணிபுரிந்து வருகிறார். பின்னோக்கிய பாதங்கள் உள்ள வாங் பாங்கின் மகன், மற்றவர்களைப் போன்ற சாதாரண பாதங்களைப் பெற்றுள்ளான்.

# சிறையிலுள்ள ஜெயாவுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும்



## நடிகர் சரத்குமார் தெரிவிப்பு

ஜெயலலிதாவுக்கு நல்ல தீர்ப்புக் கிடைக்கும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக மக்களுக்கு எண்ணிலடங்கா நலத்திட்டங்களை வழங்கி, தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி, நல்லாட்சி புரிந்து வந்துள்ள ஜெயலலிதா எதிர்க்கட்சிகளால் தன் மீது தொடுக்கப்பட்ட வழக்கை சட்ட ரீதியாக சந்தித்து விரைவில் வெற்றி காண்பார் என்பது உறுதி. தமிழகத்தில் தற்போது அமைதி நிலவுகிற போதில், சட்டம் ஒழுங்கு முற்றிலும் சிதைந்து விட்டதாகவும், அமைதி இழந்து விட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர்கள் புலம்பி குற்றம் சாட்டுவது வியப்பாகவுள்ளது.

ஏனென்றால் இப்படிக் குற்றம் கூறுபவர்கள் முன்பு கைது செய்யப்பட்ட போது, திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை மக்கள் மறந்து விடவில்லை.


ஜெயலலிதா நல்லதொரு தீர்ப்பு கிடைக்கப் பெற்று, சோதனைகளை வென்று, புது எழுச்சியோடு திரும்பி வருவார். என்று கூறியுள்ளார்.

# உலகச் செய்திகள்

# காட்டுக்குள் அகப்பட்ட பெண் 17 நாட்களின் பின் உயிருடன் மீட்பு

அவுஸ்ரேலியாவில் அடர்ந்த காட்டுப் பகுதியில் மாட்டிக் கொண்ட ·ண் ஒருவர், 17 நாட்கள் கழித்து உயிருடன் திரும்பியுள்ளார். ·வுஸ்ரேலியாவின் வட-கிழக்கு பகுதியில் உள்ள அடர்ந்த ·) சன்னோன் பிரேசர்(வயது 30) என்ற பெண் சிக்கிக் ·ர்.இதனையடுத்து பொலிஸார் மற்றும் அவசர சேவை ·ர் ஹெலிகொப்டர் மற்றும் பைக்கில் தேடுதல் வேட்டை 17 நாட்கள் கழித்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

# “தூய்மை இந்தியா” திட்டத்துக்கு முகப்புத்தக வலைத்தளமும் ஆதரவு



மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்துக்காக பிரத்தியேக செயலியை உருவாக்கலாம் என்று மூகப்புத்தக நிறுவுநர் மார்க் ஸக்கர்பெர்க் தம்மிடம் உறுதியளித்ததாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லியில் இரண்டு நாட்கள் நடைபெற்ற இணைய உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, முகப்புத்தக நிறுவுநர் மார்க ஸக்கர்பெர்க் கடந்த வியாழக் கிழமை இந்தியா வந்தார். இவர் நரேந்திர மோடியை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்பு குறித்து பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில், ”ஸக்கர்பெர்குடனான சந்திப்பு அருமையான கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் தருணமாக இருந்தது. பல புதிய திட்டங்கள் குறித்து நாங்கள் பேசினோம்.

தூய்மையான இந்தியா குறித்து நான் தெரிவித்ததும், அதற்கு உதவும் வகையில், முகபபுத்தகம் மூலம் செயலியை உருவாக்கலாம் என்று ஸக்கர்பெர்க் தெரிவித்தார். இந்த செயலி தூய்மை இந்தியா திட்டத்தை பரப்புவதற்கு உதவும் என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்” என்று மோடி கூறியிருக்கிறார்.

# ·) பா.ஜ.க.வில் இணைந்தால் ·ர் ஸ்டார்” புகழ் போய்விடும்




ஈடுபடவிருப்பதாகவும், அது குறித்து தங்கள் ரசிகர் மன்றத் தோழர்களை சந்தித்துப் பேசிக்கொண்டிருப்பதாகவும் செய்திகள் வருறன. ஓர் இந்திய குடிமகன் ·ற முறையில் தேர்தல் அரசி·லில் ஈடுபடவும், அதற்கான ·பத்தங்கள் செய்துகொள்ள·ம் தங்களுக்கு முழு உரிமை ·ண்டு

பாரதிய ஜனதாகட்சிச்சங்க·ாலத்திலிருந்து முயன்றும், ·மிழகத்தில் ஒரு கல்லைக்கூட அசைக்கமுடியாத ஒரு மிதவாதக் கட்சி தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் சில அரசியல் மாற்றங்களைப் பயன்படுத்தி தங்கள் தோளில் ஏறி கரைசேர விரும்·கிறது. இதனால் தங்களுக்கு ·ன கிடைக்கும் என்பதை தாங·சிந்தித்துப் பார்க்க வேண்·சல்லாக்காசான இந்தக் ·ேர்ந்து தாங்கள் எங்கே ·முடியாது. தமிழ் ·விருக்கும் நற் ·ாணமாக ·விருக்

# நோபல் விருது விழாவில் பங்கேற்க மோடிக்கு அழைப்பு விடுக்கும் மலாலா

(லண்டன்)





2014ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானின் மலரலா, அதற்கான பரிசளிப்பு விழாவில் பங்கேற்க இநதிய பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

நோர்வே நாட்டை சேர்ந்த நோபல் பரிசளிப்புக்குழுவினர் 2014ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசை இந்தியாவின் குழந்தைகள் நல ஆர்வலர் கைலாஷ சத்யார்த் மற்றும் பாகிஸ்தானின் பெண் கல்வி ஆர்வலர் மலாலா யூசுப் சாய் ஆகியோருக்கு பகிர்ந்தளிக்க இருப்பதாக அறிவித்துள்ளது.

மேலும் இந்தியர் ஒருவரும் பாகிஸ்தானை சேர்ந்த ஒருவரும் கல்விக்காகவும், குழந்தைகளின் நலனுக் காகவும் பொதுவான போராட்டத்தில் இணைந் திருப்பது முக்கியத்துவமானது என நோபல். பரிசு குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நோபல் பரிசு பெற்றது குறித்து கருத்து தெரிவித்துள்ள மலாலா, இந்தியா, பாகிஸ்தான் இடையேயான உறவை வலுப்படுத்த சத்யார்த்தியுடன் இணைந்து பாடுபடுவது என முடிவெடுத்துள்ளதாகவும், இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதி மற்றும் வளர்ச்சிக்கான வலுவான உறவை ஏற்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்போவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வரும் டிசம்பர் மாதம் ஆஸ்லோ நகரில் நடைபெறும் .பரிசளிப்பு விழாவில் பங்கேற்கும் படி இந்திய பிரதமர் மோடி ·ற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் ஆகியோருக்கு ·ப்பு விடுக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# இரணைமடு சந்தை வியாபாரிகள் பிரதேச சபைக்கு எதிராக போராட்டம்





கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளும் கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மா. சுகந்தன் தலைமையில் இரணைமடு சந்தை வியாபாரிகள் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு சந்தை வளாகத்தில் கரைச்சி பிரதேச சபையின் ஆளும கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத்தெரிவித்து போராட்டம் நடாத்தியுள்ளனர்.

வரிப்பணத்தினை செலுத்துமாறு பிரதேச சபைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் வருகை தந்ததையடுத்து வியாபாரிகள் வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட இரணைமடு பொதுச் சந்தையில் கரைச்சி பிரதேச சபையினரால் இது வரைக்கும் எவ்வித பாதுகாப்பான அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவும் கரைச்சி பிரதேச சபையின் இந்த அசமந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் வியாபாரிகள் இந்த போராட்டத்தில் ஈடுப்பட் டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கரைச்சி பிரதேச சபையின் த.தே. கூட்டமைப்பு உறுப்பினர் மாரியப்பன் சுகந்தன் அபிவிருத்திப் பணி களை முன்னெடுக்க கரைச்சி பிரதேச சபை தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது. குறித்த பிரதேசத்தின் அபிவிருத்தியினை முன் னெடுத்து செல்வதற்கும், குறித்த பொதுச் சந்தையின் வியாபாரிகளின் நியாயமான கோரிக்கைகளிற்கு தொடர்ந்தும் பிரதேச சபை செவிகொடுக்காது இருப்பதைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததாகவும் தெரிவித்தார். (29)

### அமைச்சர்...

விரைவில் உருவாக்கவுள்ளதோடு அது எங்களது முதலமைச்சர், எங்களுடைய அமைச்சர் டக்ளஸ் ஐயா ஆகியோரின் முன்னிலையில் உருவாக்க உத்தேசித்துள்ளேன்.

இதன் மூலம் எதிர்காலத்தில் எமது மக்களுக்கு நியாயமான பக்கச் சார்பற்ற முறையிலான சேவையினை வழங்க முடியும்.

அண்மையில் தனியார் போக்கு வரத்துச் சாரதிகள், நடத்துனர்கள் மக்களுக்கு அசௌகரிய மான முறையில் நடந்து கொண்டதாக அறிந்தோர் உண்மைதான் இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்பேன்.

அத்துடன் நாம் துரிதகதியில் அபிவிருத்தி அடையவேண்டும் அவ்வாறு துரித கதியில் அபிவிருத்தி அடையவேண்டும் என்றால் கட்சி பேதமின்றி செயற்படவேண்டும் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைதோன்றும் என நான் நம்புகின்றேன்

இங்கு எனது அழைப்பை ஏற்று எமது மக்களில் தேவைக்கான போக்குவரத்து துறையின் அபிவிருத்தியில் கலந்து கொண்டுள்ள எங்களது அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

### யாழ்...

புகையிதரம் இரவு 20.00 மணிக்கு கொழும்பைச் சென்றடையும், யாழ். தேவி புகையிரதம் கொழும்பிலிருந்து காலை 6.57இற்கு புறப்பட்டு யாழ்ப்பாணத்தை 15.04இற்கு வந்தடையும் அதேபோல் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.25 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 1.45 மணிக்கு கொழும்பை சென்றடையும் அவ்வாறே நகர்சேர் கடுகதி புகையிரதம் புகையிரதம் கொழும்பிலிருருந்து பகல் 11.50 மணிக்கு புறப்பட்டு மாலை 18.15 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு வந்தடைந்து 11.00 மணிக்கு புறப்படும் நகச்சேன் கடுகதி புகையிரதம் கொழும்பை மாலை 17.40 இற்கு சென்றடையும் தினசரி இரவு தபால்புகையிரதம் கொழும்பிலிருந்து 19.45 மணிக்கு புறப்பட்டு காலை 5.07 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும் இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 19.05 இற்கு புறப்படும் தபால் புகையிரதம் அதிகாலை 04.23 இற்கு கொழும்பைச் சென்றடையும்

இது தவிர விடுமுறைநாட்களில் விடுமுறை நாள் புகையிரதம் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 10.00 மணிக்கு புறப்பட்டு மாலை 18.11 மணிக்கு கொழும்பை சென்றடையும். அதேபோல் கொழும்பிலிருந்து காலை 9.40 இற்கு புறப்படும் புகையிரதம் மாலை 17.07இற்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும் இப்புகையிரதம் மாத்தறை வரையில் பயணிக்கும் என புகையிரத திணைக்களத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### சப்ரகமுவ...

கொடை அரசாங்க மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளரான ரசிந்து ஜயசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் போது, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியொன்றும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் தங்களை அடையாளம் காணமுடியாதவாறு தலைக்கவசம் அணிந்திருந்ததாகவும் தடிகள் , சைக்கிள் செயின் மற்றும் வாள்கள் போன்றவற்றை பயன படுத்தியே தாக்குதல் மேற்கொண்ட தாகவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக சிறப்பு பொலிஸ் குழுவொன்று விசாரணைகளை நடத்திவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண கூறினார்.

இதேவேளை. சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் நாட்டின் பல பகுதிகளிலும் ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை மற்றும் றுகுணு உள்ளிட்ட பல்கலைக் கழகங்களின் மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### நந்திக்...

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் நந்திக் கடலில் இறந்த நிலையில் மீன்கள் கரையொதுக்கியிருந்தன. இவ்வாறு கரையொ துங்கிய மீன்களை எமது சங்கத்திலுள்ள 75இற்கும் அதிகமான மீனவர்களின் உதவியைக்கொண்டு சுத்தம் செய்தோம்.

அதன்பின்னர் தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியிருந்தா லும் சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைகளின் பிரகாரமே நாம் செயற்படவேண்டியுள்ளது. மீன்கள் இறந்த நிலையில் கரை யொதுங்கியமையால் நந்திக்கடல் நீரில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே மழை பெய்தால் இந்நீரில் மாற்றங்கள் ஏற்படும். அதன் பின்னரே மீன்பிடித் தொழிலை முன்னெடுக்க முடியும்.

எனவேதான், சுகாதார அதிகாரிகளின் கட்டளை வந்ததன் பின்னரே வழமை போல தொழிலை மேற்கொள்ள மீனவர்களுக்கு அனுமதி வழங்க முடியும் என்றும் தெரிவித்தார்.

### மக்களுக்கான...


சேர்ந்த 20 ஆயிரம் பேருக்கு காணிகளுக்குரிய ஆவணங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

இதில் யாழ். மாவட்டத்தில் 1001 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3886 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3642 குடும்பங்களும் வவு னியா மாவட்டத்தில் 4228 குடும்பங்களும் மன்னார் மாவட்டத்தில் 720 குடும்பங்களும் காணி ஆவணங்களைப் பெறவுள்ளன.

இதன்பின்னர் 12 மணியள வில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியிலும், வட்டக்கச்சிமகாவித்தியாலயத்திலும் அமைக்கப்பட்டுள்ள மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்களைத் திறந்து வைப்பார்.

பிற்பகல் 1.45 மணியளவில் அக்கராயனில் 77 மில்லியன் ரூபா செயவிலில் அமைக்கப் பட்ட வைத்தியசாலையை திறந்து வைப்பதுடன் மாலை 4.15 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத்தொகுதியையும் திறந்து வைப்பார். (29)

# பளையிலிருந்து யாழிற்கான இறுதி பரீட்சார்த்த சேவை




ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாளையதினம் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவையை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ள நிலையில், அதற்கு முன்னோடியாக நேற்றையதினம் பளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான இறுதிப் பரீட்சார்த்த சேவை நடாத்தப்பட்டது.

குறித்த பரீட்சார்த்தசேவை நேற்று மாலை பளையிலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்தது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்து பிரதி அமைச்சர் ரோகணதிஸநாயக்க வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, ஜனாதிபதியின் இணைப்பாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா உட்பட அரச அதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். நேற்றைய பரீட்சார்த்த சேவையில் மாணவர்கள், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (இ, 25)

# கோரிக்கைகளை ஏற்காவிடின் அரசிலிருந்து வெளியேறுவோம்

## கூறுகிறது ஜாதிகஹெல உறுமய

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து, 17ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், தான் உட்பட முக்கிய அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்தில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் உப தலைவர் அத்துரலியே ரத்ன தேரர் கூறியுள்ளார்.

தமது நிலைப்பாடுகள் குறித்து அரசாங்க உயர்மட்டத்திடம் விளக்கிய போதிலும் அதற்கு சிறந்த பதில் எதுவும் கிடைக்கவில்லை என்பதால், இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என தான் உட்பட அமைச்சர்கள் சிலர் தீர்மானித்துள்ளதாகவும் இறுதித் தீர்மானம் எதிர்வரும் 14 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மற்றும் மக்களின் நலனுக்காக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து 17ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துமாறு அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சி என்ற வகையில் ஜாதிக ஹெல உறுமய முன்வைத்த முக்கியமான யோசனைகள் எதனையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தவறியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் தொடர்ந்தும் அரசாங்கத்தை பாதுகாத்துக் கொண்டு அரசாங்கத்திற்குள் இருப்பது மக்களுக்கு செய்யும் துரோகம் என்பதால், நான் உள்ளிட்ட அமைச்சர்கள் இந்த் தீர்மானத்தை எடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அத்துரலியே ரத்ன தேரர் தலைமையிலான அமைப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசியல் அமைப்புத் திருத்தங்கள் சம்பந்தமான யோசனையை வெளியிட உள்ளது.

### ஜனாதிபதி...

அவர்கள் பொதுவேட்பாளர்கள் இல்லை. அவர்கள் அந்தந்தக் கட்சிகளின் தனித்துவமான வேட்பாளர்களே. ஆனால் இலங்கை அரசியலில் எமது கட்சியுடனேயே அதிகமான அரசி யல் கட்சிகள் இணைந்துள்ளன. எனவே நானே பொதுவேட்பாளர் என்ற தகைமை உடையவன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் மூன்றாவது தடவையாகப் போட்டியிடுவேன். எதிர்க்கட்சிகள் என்னதான் காரணம் கூறினா லும் அவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை.

ஆனால் எமக்கு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இருக்கிறது. தேர்தலில் நாமே வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. கடந்த அரசாங்கங்கள் அபிவிருத்தி பற்றி பேசிவந்தன. ஆனால் நாம் அபிவிருத்தியைச் செய்திருக்கிறோம். புதிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு அனைத்துப் பகுதிகளும் இணைக் கப்பட்டு, இன்று இலங்கை சுருங்கிவிட்டது. அபிவிருத்தியை ஏற்றுக்கொள்ளாத எதிர்த் தரப்பினர், அரசு மீது ஊழல் குற்றச்சாட்டுக் களை முன் வைத்தனர். ஆனால் பொதுமக்களுக்கு உண்மை என்னவென்பது நன்றாகத் தெரியும். குறிப்பாக சீனாவுடன் இணைந்து நாம் மேற்கொண்ட அபிவிருத்திகளைக் கடுமையாக விமர்சித்தனர்.

ஆனால் அந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் பொருட்படுத்த வில்லை. இனியும் பொருட்படுத்தப்போவதில்லை. நாட்டின் அபிவிருத்தி தொடரும். - என்றார்.

# நாட்டின் சீரழிவிற்கு இனவாதமே காரணம்

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட அனைத்தையும் அழித்து நாட்டை பின்னோக்கித் தள்ளியது பயங்கரவாதம் அன்றி இனவாதமே என்று அமைச்சர் ராஜித சேனாரத்தின சாடியுள்ளார்.

பேருவளை மக்கொனயில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த போது அபிவிருத்தியில் ஜப்பானுக்கு அடுத்த நிலையில் நாம் இருந்தோம். அவர்கள் 89 டொலர்கள் தனிநபர் வருமானத்தைக் கொண்டிருக்க நாம் 88 டொலர்கள் தனிநபர் வருமானம் கொண்டிருந்தோம்.

ஆனால் இன்று ஜப்பானியர்கள 34 ஆயிரம் டொலர்கள் தனிநபர் வருமானத்தைக் கொண்டுள்ளனர். நாம் இன்னும் 2 ஆயிரம் டொலர் களைத் தாண்டவில்லை.

இவ்வாறான பொருளாதாரப் பின்னடைவுக்கு இந்நாட்டில் நிலவிய இனவாதம் தான் காரணம். சுதந்திரமடைந்தது தொடக்கம் இன்று வரை நாட்டில் பாரிய அழிவுகள், இனவாதச் செயற்பாடுகளின் காரணமாகவே நடைபெற்றது.


பயங்கரவாதம் ஒரு காலத்தில் இந்நாட்டில் தலைவிரித்து ஆடினாலும், 2009ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை முறியடித்துவிட்டார்.

தற்போது இனவாதத்தின் மறுபக்கமான மதவாதம் தீவிரமாக பரவத் தொடங்கியுள்ளது இது மோதல்களுக்கும் வழிவகுக்கின்றது.

இவையெல்லாம் பௌத்தத்தின் பெயரால் நடைபெறுவதுதான் கவலைக்குரிய விடயம்.

பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றவர்கள் ஒருபோதும் மதவாதிகளாக இருக்க மாட்டார்கள் என்றும் அமைச்சர் ராஜித தெரிவித்துள்ளார.

## கொடிகாமம் சந்தைப்பகுதியில் 4 கடைகள் எரிந்து நாசம்



(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தைப் பகுதியில் அமைந்திருந்த நான்கு மாடிக் கடைகள் நேற்று முன்தினம் இரவு தீப்பற்றி எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புடவை மற்றும் பாய்க்கடைகள் என்பனவே இவ்வாறு எரிந்து நாசமானமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து கொடிகாமம் சந்தைப்பகுதிக்கு மக்களின் வருகை குறைந்ததாகவும் வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை கைவிட்டு வீடுதிரும்பியதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## ஆளும் கட்சியில் ஐ.தே.க. எம்பிக்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் ஆளுங்கட்சியில் இணைவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவரின் தலைமையில் இந்தப் பேச்சுவார்த்தை இடம் பெற்றுள்ள்தாகவும் இந்த பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் மேற்படி தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## மரண அறிவித்தல்

**சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம்**

( BSe (Hons) Col; PhD(Edin)

**முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட பேராசிரியர் மனோ சபாரத்தினம் (முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி, கிழக்குப் பல்கலைக்கழகம்) அவர்கள் வெள்ளியன்று (10.10.2014) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த அமரர்களான சபாரத்தினம் லஷ்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும் அமரர்களான நவரத்தினம் ஞானாம்பிகை, கனகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் அமரர் யோகாம்பிகை, அமிர்தவல்லி, அமரர் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் விஜயகுமாரி (ஜெயந்தி), சுரேந்திரகுமார் ஆகியோரின் சிறிய தாயா[illegible] சிவகுமார், அமரர் கேதீஸ்வரி, சுசீலா, சுபத்திரா, முருதா[illegible], கண்ணதாஸ், சுகன்யா, ரமணதாஸ், விநாயகதாஸ் ஆகியோரின் மாமியுமாவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (12.10.2014) பிற்பகல் இரண்டு மணியளவில் திருநெல்வேலி அம்பலவாணர் பாதை 'கந்தன் அருள்' இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரிகைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
**(சகோதரன்)**
**பாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**'கந்தன் அருள்'**
**அம்பலவாணர் பாதை,**
**திருநெல்வேலி**

(இ)




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.